Rs.

# தமிழில் தந்தி



ஆக்கியோன்

அ. சிவலிங்கம்

# தமிழில்
# தந்தி

★

ஆக்கியோன்

அ. சிவலிங்கம்.

★

முதற்பதிப்பு—1955
திருத்திய பதிப்பு—1957

உரிமை ஆசிரியனுக்கே

0.50
விலை ரூபாய் ஒன்று

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1878
நன்கொடை எண்: 1878


மதுரை காமராசர் பல்கலைக்
அவ்வை
தி.க.

இந்நூல் வெளிவர சிங்கப்பூர் ஆங்கிலோ இந்திய, சீனத் தமிழ் நண்பர்கள் பேருதவி புரிந்தார்கள். குறிப்பாக கரம்பக்குடி திரு. வி. முத்து அவர்கள் அவருக்குத் துணை நின்ற விருது நகர் அழகியநல்லூர் திரு. க. சீனிவாசன் அவர்கள் ஆகிய இவர்களது உதவி நான் என்றும் மறக்க இயலாததாகும். இவர்களுக்கெல்லாம் நான் என்ன கைமாறு செய்ய இயலும்?

# படையல்

தமிழ் அறிஞரும், முன்னாள் மாவட்டக் கல்வித்துறைத் தலைவருமாகிய திரு. ச. சச்சிதானந்தம் **பிள்ளை** அவர்கள் யான் கேடில் விழுச்செல்வமாம் கல்வியை ஓரளவு பெறுவதற்குக் காலத்தினாற் செய்த உதவிக்கு எனது நன்றியின் உருவாய் வருவது இவ் வெளியீடு.

13—8—1956ல் ஈரோட்டில் நடைபெற்ற அஞ்சல் ஊழியர் மாநில மாநாட்டில் தமிழ்த்தந்தி செயற்படுத்தப்படும் காட்சி.



சு. பரசுராமன்

அ. சிவலிங்கம்
(ஆசிரியன்)

# முன்னுரை

இன்று தமிழகமெங்கும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. தமிழில் பேசுவதும் எழுதுவதும் தம் பெருமையைக் குறைப்பனவல்ல என்பதை மிகப் பெரும்பாலோர் உணர்ந்துவிட்டனர். தமிழ்த் தாயைத் தொழுது வாழ்த்தி வணங்குதற்குத் தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றனர். அதன் விளைவாக எண்ணற்ற சொற்பொழிவாளர்கள் மலர்ந்துள்ளனர். தீஞ்சுவைத் தமிழ் நூல்கள் இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறைகளிலும் பிறந்துவளர்ந்து வருகின்றன.

எதையும் தமிழிலேயே செய்யமுடியுமென்பதைப் பல துறைகளிலுமுள்ள வல்லுநர்கள் மெய்ப்பித்துள்ளனர். நம் தமிழகத்தில் தமிழே ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டு விட்டது.

1945ல் நான் ஆங்கிலத் தந்தியைப் பயிலத் தொடங்கினேன். அற்றை நாள் முதல் தந்தியை நினைக்கும்போதெல்லாம் 'தமிழிலும் தந்தி முறையை அமைக்க முடியுமா?' என்ற வினா என் உள்ளத்தில் எழும். சிறுவர்களாயிருந்த போது, நம்மில் பலர் விண்ணில் பறவைகள் போல பறக்கும் கனவை எத்தனை முறை கண்டிருக்கிறோம்! அத்தகைய கனவாகவே என் நினைவுமாகி விடுமோ என்ற கவலை அடிக்கடி என்னை வருத்தும். இப்படியே பல மாதங்கள் — பல ஆண்டுகள் — இடையிடையே தமிழ்த் தந்தி முறையைப் பற்றிச் சிந்திப்பதும், அவ்வெண்ணம் உருப் பெறாமல் சிதைவுறுவதும் வழக்கமாகிவிட்டன. 'தமிழுக்கும் தந்திக்கும் உறவேற்பட முடியாது; நான் எண்ணுவது வீணான பேராசை; எனவே இதைப்பற்றி நினைக்காமலிருப்பதே நல்லது' என்றுகூட முடிவு செய்தேன். ஆனால் ஆசை வெட்கத்தை வென்றது. மறுபடியும் எண்ணம் தலை தூக்கியது! ஆசையும் பன்மடங்காகியது!

தமிழன்னையின் வளர்ச்சிக்குத் தமிழ் நாட்டினர்மட்டுமன்றி மேலை நாட்டினரும் அரும்பணி புரிந்துள்ளனர்.

ஒல்லும்வகை தமிழ்ப்பணி புரியவேண்டும் என்ற ஆர்வம் கிளர்ந்தெழுந்தபோதிலும், போதிய காலம், சூழ்நிலை முதலி யன எனக்குக்கிடைக்கவில்லை.

பல்வேறு காலங்களில், பலதுறைகளிலுமுள்ள அறிஞர்களால் செய்யப்பெற்ற அணிகலன்களைப் பூண்டு புன்னகை பூத்து நிற்கிருள் நம் தமிழன்னை. எனினும் நானும் ஒன்றைச் செய்து அன்னையை மேலும் மகிழ்விக்க வேண்டு மென்ற என் பேராவல் தணியவில்லை! அப்பேராவலே 'தமிழ்த் தந்தி' என்ற என் எண்ணத்தை நாளும் வளர்த்தது.

**'தமிழ்த்தந்தி' என்ற என் கனவு 1955 ஜனவரி 25-ம் தேதி யன்று நனவாகியது.** நோயினுல் உடல் நலிவுற்றிருந்த நான் நடுங்கும் கைகளுடன் முதன்முதலாகத் தமிழ்த் தந்தியை எழுதத்தொடங்கினேன். **"கட" "கட்டு" ஒலிகள் என்னுள் தமிழின்பத்தை எழுப்பின!**

என் புத்தகம் பற்றி ஒரு சிலர் மாறுபட்ட கருத்துக் களைக்கொண்டிருந்தனர். ஆங்கில முறைக்குமாருக, ஆனல் தமிழ் மொழிக்கேற்பவும் வரி வடிவத்திற்கேற்பவும் நான் அமைத்த சில ஒலிக்குறிகள் அவர்களை மருளவைத்தன. 'எல்லோரும் என் முறை எளிதில் இயங்கும் தன்மைய தென்பதை ஏற்றுக்கொண்டால் எவ்வளவு நல்லது என எண்ணினேன். இடையில் பல நெருக்கடிகள் என்னைச் சூழ்ந்தன; எனினும் என் எண்ணத்தை எங்ஙனம் நிறை வேற்றுவதென்பதே என் பெருங்கவலையாக இருந்தது. பல அன்பர்கள் என் முறையைப் பாராட்டி எழுதினர். ஓரளவு என்னை ஊக்குவித்தனவேயன்றி பாராட்டுரைகள் என் கவலையை மாற்றவில்லை. பல அன்பர்களை என்னுடன் ஒத்துழைக்கும்படி வேண்டினேன். நான் விரைவில் என் முறையைச் செயற்படுத்திக் காட்ட இயலுமென்பதை அவர்களால் நம்ப முடியவில்லை. ஆனல் எனக்குத் **தெரியாமலே** என் முறையை ஆர்வத்துடனும், ஆராய்ச்சிக்கண்ணுடனும் ஒருவர் பயின்று வந்தாரென்பதை விரைவில் அறிந்தேன். உடனே அவருக்கு — **பரசுராமனுக்கு** — என் நன்றியை தெரி

வித்து என் முறையை விரைவில் செயற்படுத்திக்காட்ட வேண்டுமென்ற திட்டத்தையும் குறிப்பிட்டு எழுதினேன். மகிழ்ச்சியுடன் என் திட்டத்தை நிறைவேற்ற ஒத்துழைப்ப தாகப் பதிலெழுதினர்.

அங்ஙனமே **அவர் ஒத்துழைப்புடன் 13–8–56**ல் ஈரோட்டில் நடைபெற்ற அஞ்சல் ஊழியர் மாநில மாநாட்டில் தந்தி **வல்லுநர்கள், செய்தி நிருபர்கள்,** பொது மக்கள் முன்னிலையில் அவர்கள் கொடுத்த தமிழ்ச் செய்திகளை வாங்கியும் அனுப்பியும் காட்டினேன். அதற்குப் பிறகு நாங்களிருவரும் குழித்தலையில் 7–10–56ல் **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்** அவர்கள் தலைமையில் நடைபெற்ற **தமிழாட்சி மொழி மாநாட்டில்** தமிழ்த் தந்தி முறையைச் செயற்படுத்திக் காட்டினோம். இவ்விரண்டு நிகழ்ச்சிகளுக்குப் பின்னரே பொது மக்கள் மட்டுமன்றி அஞ்சல் ஊழியரும் தந்தித் துறையினரும் என் முறையை எவ்வித ஐயமுமின்றிப் பாராட்டவும் பயிலவுந் தொடங்கியுள்ளனர். தமிழகம் மட்டுமன்றி இலங்கை, மலேயா இவைகளிலுள்ள செய்தித் தாள்களும் என் முறையைப் பாராட்டியுள்ளன. தொடக்க முதல் இன்று வரை தமிழ்த் தந்தி வளர்ச்சிக்கு எல்லாவகை ஆதரவையும் ஒத்துழைப்பையும் மிகப் பெருமளவில் அளித்துவரும் அஞ்சல் ஊழியர் சங்கங்களுக்கு நான் பெரிதுங் கடமைப் பட்டுள்ளேன். **சிங்கப்பூரில் தமிழ்ப்பணி புரிந்துவரும் கரம்பக்குடி திருவள்ளுவர் தமிழ் வளர்ச்சிக் கழகம்** 'தமிழ்த் தந்தி" பற்றிய கருத்துரைகளை அச்சாக்குவதற்குக் காலத்தினுற் செய்த பொருளுதவி வானையுஞ்சிறிதாக்கியது!

தமிழில் அடிக்கடி வழங்கும் எழுத்துக்களுக்குக் குறைந்த ஒலிக்குறிகள் அமைப்பது சிறந்ததென்று சிலர் என்னிடம் கூறினர். அக்கொள்கை **தந்தித் துறைக்குப் பொருத்தமில்லை எளிமையாக எழுதுவதற்கேற்ப ஒலிக்குறிகளையமைப்பதே சிறந்தது.** 'தந்தி' என்ற சொல்லை "த் அந்த் இ" என இலக்கண முறையில் அனுப்பினாலும் குழப்பமே நேரும்.

எழுத்தின் வரி வடிவத்தை அடிப்படையாகக் கொள்ளாது, வேறு எம்முறையிலமைத்தாலும், செய்திகளை அனுப்பமட்டும் முடியுமேயன்றி வாங்கமுடியாது.

முதற் பதிப்பிலிருந்து சில மாற்றங்கள் செய்துள்ளேன். 'கட' என்ற ஒலி கேட்டு எளிதில் எழுதுவதற்கேற்ப தமிழெழுத்து எதுவுமில்லாமையின், அதை முன்பு பயன்படுத்தவில்லை. மெய்யெழுத்தைக் குறிக்கும் புள்ளியை அதனால் எளிதில் குறிக்க இயலுமாகலின், அதை இப்பொழுது பயன்படுத்தியுள்ளேன். 'இ' எழுத்துக்கு 'கட்' ஒலிகள் நிறைந்த 'த'வின் ஒலிக் குறிகளையும் 'த' எழுத்துக்கு 'கட' ஒலிகள் நிறைந்த 'இ'ன் ஒலிக் குறிகளையும் மாற்றியுள்ளேன்.

ஃஜ அதன் இயல்பான உருவத்தில் எழுதவும், க்ஷ, ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ முதலிய வடவெழுத்துக்களை ஒரு பொதுக் குறியினாலேயே குறிக்கவும் வழி செய்துள்ளேன்.

இம்மாற்றங்கள் குறிப்பாக மொத்த ஒலிக் குறிகளை 37லிருந்து 33ஆகக் குறைத்துள்ளன. இதனால் இம்முறை மேலும் எளிதாக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொடுக்கப்படுகின்ற தந்திகள் பெரும்பான்மையாகத் தமிழ் நாட்டில் உள்ள இடங்களுக்கே கொடுக்கப்படுகின்றன. தமிழகத்திற்கப்பால் செல்பவையோ, மிகச் சில. தமிழகத்திற்கப்பால் செல்லும் தந்திகள், இப்பொழுது உள்ளது போன்றே ஆங்கில முறையிலேயே அனுப்பப்படும். ஒருவரே இரண்டுதந்தி முறைகளையும் பயின்று குழப்பமின்றி வேலை செய்யமுடியுமென்பதையும்நான் நடைமுறையில் நிரூபித்துக் காட்டியிருக்கிறேன்.

எனவே தமிழ்த் தந்தி முறையை நடைமுறைக்குக் கொணர்வதில் எத்தகைய சிக்கலும் ஏற்பட இடமில்லையென்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பொது மக்களும், தபால் தந்தி இரயில்வே ஊழியர்களும், செய்தித் தாள்களும், தமிழகத்திற்கு வெளியேயுள்ள தமிழர்களும் தமிழ்த் தந்திமுறை நடைமுறைக்குவர ஆவன செய்யவேண்டுகிறேன்.

**அ. சிவலிங்கம்**

## " A LAUDABLE INVENTION "

For the first time in the history of Indian Telegraphy a system akin to Morse Code has been invented in Tamil One of our Union Workers of Tiruchirappalli Branch, Com. A. Sivalingam, after careful study and hard endeavour, has brought out an easy working system of sending and receiving messages in Tamil. We hope the Government would 'seize' his talents and utilise to the best advantage of the nation.

" Post " New Delhi, Apiril 1955.

Com. A. SIVALINGAM, Sub-Postmaster, Karambakudi, Tiruchi Division has successfully compiled Morse Code and Telegraphy in Tamil to receive and send Tamil messages in the code in Tamil. We hope the Department will recognise and utilise his talents.

Our congratulations to this comrade who is also an active Union Worker of Tiruchi Branch.

" The Postal Worker "
MADRAS. March 1955.

" The conference highly appreciates and heartily congratulates Com A. Sivalingam, an active member of Tiruchirappalli Branch, who has successfully compiled a code on the lines of Morse Code in Telegraphy in Tamil to receive and send Tamil messages and this conference notes with great distress the attitude of the Circle Administration in rejecting his recommendations in a routine fashion without taking the least pain to go into the merits of the formulations and trying to utilise his talents.

This Conference would like to point out to the administration that such attitude dampens the enthusiasm

of the ever resourceful workers and curbs the progress of the nation in every sphere in a socialistic pattern of society as envisaged by our redoubtable leaders.

The conference, therefore, urges the authorities to reconsider the case and try to adopt the code with any modifications if necessary.

Resolution passed at the
Provincial Conference at
Banglore held on 7—7—55.

Our member Com. A. Sivalingam, has successfully compiled Morse Code and Telegraphy in Tamil enabling the sending and receiving the messages in TAMIL, a Practicable Proposition.

We congratulate the comrade for his talents and hope the Nation will reward him soon when messages within the province in the Regional Language becomes acceptable.

Tiruchy Postal Union.
Annual Report
12—6—55.

# ஓர் பெருமிதச்செய்தி

## தமிழ்த் தந்தி முறை கண்டுபிடிக்கப்பட்டது!

*நமது சங்க ஊழியரும் திருச்சி டிவிஷன் காம்பக்குடி சப்-போஸ்ட்மாஸ்டருமாகிய தோழர் அ. சிவலிங்கம் அவர்கள் தமிழில் தந்தி அனுப்பவும் வாங்கவும் ஏதுவான மார்ஸ் கோடு* (Morse code)*—போன்றதோர் எளிய முறையை வெற்றிகரமாகச் சிருஷ்டித்திருக்கிறார். இம்முறையைப் புத்தக வடிவில் நமது இலாகா அதிகாரிகளுக்கும் சர்க்காருக்கும் அனுப்பியிருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.*

இவ்வித ஆக்க வேலை படைப்புகளுக்குச் சர்க்கார் உடனடியாக ஆதரவளித்து ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

கலைக்கதிர்—24-3-55,
தபால்சங்க இதழ்.
திருநெல்வேலி மாவட்டம்.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மேலைச்சிவபுரி அஞ்சல் நிலையத் தலைவர் திரு. அ. சிவலிங்கம் அவர்கள் "மோர்ஸ்" போன்றதொரு எளிய முறையை முதன் முதலாகத் தமிழிலேயே செய்திகளை அனுப்பவும் பெறவும் இயலுமாறு வகுத்துள்ளார்கள். அவரது முறைக்கு ஆதரவு கொடுப்பதோடு, அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமெனவும் அரசியலாரை ஒரே மனதாக இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

அன்னாரின் அரிய பெரிய இந்தத் தொண்டை இம் மாநாடு முழு மனதுடன் பாராட்டுகிறது.

**மதுரை மாவட்ட மாநாடு,**
17—6—56

Extract from the Proceedings of Karambakudy Panchayat Ordinary Meeting held on 26—5—55.

தமிழில் முதல் முறையாகத் தந்திச் செய்திகளை அனுப்பவும் வாங்கவும் கூடிய எளிய முறை ஒன்றைக் கண்டு பிடித்துள்ள கறம்பக்குடி சப்-போஸ்ட் மாஸ்டர் ஸ்ரீ அ. சிவலிங்கம் அவர்களை இப்பஞ்சாயத்து போர்டு பாராட்டுகிறது. தமிழ்த் தந்தி முறையினால் பெரிதும் தமிழ் நாடு பயனடையும்.

இம்முறையை விரைவில் அமுலுக்குக் கொண்டுவர இது சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளையும மந்திரிகளையும் கேட்டுக் கொள்வதென்று இப்பஞ்சாயத்து போர்டு தீர்மானிக்கிறது.

சி. சோமசுந்தரம் செட்டி.
**பிரசிடெண்ட்.**

ஆங்கிலத்தில் உள்ளது போன்று தமிழிலேயே தந்தியனுப்பும் எளியதொரு முறையைக் கண்டுபிடித்துள்ள, திரு. அ. சிவலிங்கம் அவர்களை இம்மாநாடு பாராட்டுகிறது.

அம்முயற்சியை ஆதரித்துச் சென்னை அரசாங்கம் தமிழ்த் தந்தி முறையையே தமிழ் நாட்டில் செயற்படுத்த ஆவன செய்யவேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

சென்னை மாநிலத் தமிழாசிரியர்
மூன்றாவது மாநாடு,
தஞ்சாவூர்—22—4—56.

தமிழில் தந்தி கொடுக்கும் தமிழ்த் தந்தி முறையினைச் செயற்படுத்த ஆவன செய்யுமாறு இந்தியக் கூட்டாட்சியாளரையும் சென்னை மாநில ஆட்சியினரையும் இம்மாநாடு வேண்டுகிறது.

தமிழ் ஆட்சி மொழி மாநாடு,
குழித்தலை, 7—10—56,

Com. A. S. Rajan, M. A. All India General Secretary (AIPEU Class III), New Delhi writes :—

## MY IMPRESSIONS

I am indeed very glad at the new innovation of Com A. Sivalingam who can be named as the "Tamil Morse" for having invented a simplified code for sending messages in the great Tamil language.

In these days, when regional languages are vying with one another to grow in a spirit of healthy rivalry, the language of Tamils which has a hoary tradition, both rich in expression and stimulating in thought besides its chasteness and sweetness cannot but occupy its honoured place, even in the matter of Telegraphy.

After all, language is a vehicle of thought and the telegraphic code is a means of conveyance of such messages from one individual to another. Just as languages differ in script, syntax and etymology, so also, the codes adopted for different languages are bound to vary.

But the codes prescribed by Com. A. Sivalingam are not only easy to remember but the number of codes coded is very much less when compared to the vastness of the Tamil language. Nevertheless it speaks of the ingenuity of Com. A. Sivalingam who is a young prodigy of the P. & T. Department. He deserves all encouragement and help for contributing his best for the growth of a socialistic Tamil State.

The Government being wedded as it is and standing for the growth of all regional languages, will do well to give an official touch to the Tamil code invented by Com. A Sivalingam for sending messages in Tamil through Telegraphy. The Government will also do well at the first instance to arrange for demonstrations at the major centres of Tamilnad with a view to enliven the public in this direction, Let us see whether the Government will be able to implement their words of advice into actual practice.

I hail the invention of this 'Modern Morse' of Tamilnad and wish him. well and good cheer.

A. S. Rajan.

*தோழர்* A. S. *ராஜன்* M. A., *பொது செயலாளர், அனைத்திந்திய தபால் ஊழியர் சங்கம் (மூன்றாவது பிரிவு) புது டில்லி.*

தோழர் அ. சிவலிங்கம் அவர்களின் புதுமை கண்டு உண்மையில் பெரு மகிழ்ச்சி யடைகிறேன். செய்திகளை நம் சீரிய தமிழ் மொழியில் அனுப்புவதற்குரிய எளிய தந்தி முறையைக் கண்டுபிடித்துள்ள அவரை "தமிழ் மோர்ஸ்" எனலாம்.

ஒவ்வொரு வட்டார மொழியும் வளர்ச்சியுற .ஒன்றோ டொன்று ஆக்கப் போட்டியிலீடுபட்டுள்ள இக்காலத்தில் தொன்மை, பெருமை, தூய்மை. இனிமை மட்டுமன்றி சொல் வளமும் கருத்துச் செறிவுமுள்ள தமிழர்களின் மொழி, தந்தித் துறையிலும் தனக்குரிய உயரிய இடத்தைப் பெற்றே தீரும்.

எண்ணத்தை வெளியிடுவதற்குரிய சாதனமே மொழியாகும். செய்திகளை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குக் கொண்டு செல்ல உதவும் கருவியே தந்தி ஒலிக்குறியீடுகள். வரி வடிவம், சொல்லமைப்பு, சொற்களின் பிறப்பு இவைகளில் மொழிகள் மாறுபடுவதைப் போலவே வெவ்வேறு மொழிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள ஒலிகுறியீடுகளிலும் மாற்றமிருக்கத்தான் செய்யும்.

ஆனல், தோழர் அ. சிவலிங்கம் அவர்கள் வகுத்துள்ள ஒலிக்குறியீடுகளை நினைவிலிறுத்துவது எளிதோடன்றி, தமிழ் மொழியின் விரிவைப் பார்க்குமிடத்து அவைகளின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. தபாற் தந்தி இலாகாவின் வியத்தகு இளைஞரான தோழர் அ. சிவலிங்கம் அவர்களின் ஆக்குந்திறனை இது எடுத்துக்காட்டுகிறது. பொது உடைமைத் தமிழக வளர்ச்சிக்காக அவர் செய்துள்ள மிகச் சிறந்த பணிக்கு எல்லா வகை ஆதரவும் உதவியும் அளிக்கப் படவேண்டும். இன்றைய நிலையில் எல்லா வட்டார மொழிகளும் வளர்ச்சியடையவேண்டு மென்பதே அரசியலாரின் கொள்கையாக உள்ளமையின், தந்தியில் தமிழ்ச் செய்திகளனுப்ப தோழர் அ. சிவலிங்கம் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தமிழ்த் தந்தி முறைக்கு நாடாள்வோர் ஆதரவு தரவேண்டும். இத்துறையில் மக்களுக்குப்

புத்துணர்ச்சி யூட்ட முதற்படியாக அரசியலாரும் தமிழ் நாட்டின் பெரிய நகரங்களில் இம்முறையை நிரூபித்துக் காட்டுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். பிறர்க்குக் கூறும் அறிவுரைகளை உள்ளபடியே அவர்கள் நடைமுறைக்குக் கொணர்ந்து நிறைவேற்றுவார்களா வென்பதைப் பார்ப்போம்.

இந்நவீன காலத்திய 'தமிழ்நாட்டு மோர்ஸின்" கண்டுபிடிப்பை நான் பாராட்டி வரவேற்கிறேன்.

நலமும் இன்பமும் அவர் பெறுவாராக !

**A S. ராஜன்,**

தோழர் D. ஞானையா, B. A. அனைத்திந்திய தபாற் சங்க உதவிச் செயலாளர் (AIPEU CLASS III.) புதுடில்லி.

தோழர் அ. சிவலிங்கனார் அவர்களால் எழுதப் பெற்ற "தமிழில் தந்தி" என்ற நூல் கண்டு மகிழ்வுற்றேன். சித்தாந்தச் செல்வரும், செந்தமிழ் வல்லாருமாகிய உயர்திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களிடம் தொடர்பு கொண்டவர், இந்நூல் ஆசிரியர் என்பதனாலேயே அன்னாரின் தகுதியும் திறமையும் ஓரளவு அறிந்து கோடல் இயலும்.

இப்போது எல்லாம் தமிழில் இருக்கவேண்டும், நம் ஐக்ய தமிழகத்தில் ஆட்சி மொழி தமிழாதல் வேண்டும், என்று தமிழ் மக்கள் ஒரு சேர, முழங்கும் இந்நேரத்தில் "தமிழ்த் தந்தி"யை அனைவரும் வரவேற்பர் என எண்ணுகிறேன்.

தமிழிலேயே தந்தி அனுப்பும் பயிற்சி தமிழ் மக்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப் படுவதே.

**தமிழ்முழங்கும் இடமெல்லாம் தமிழில் தந்தி வேண்டும்.** இவ் வகையில் இந்நூல் பெரிதும் துணை செய்யும். ஆங்கிலத்தில் செய்திகள் அனுப்புவது போல் தமிழிலும் விரைவாகச் செய்திகளை அனுப்ப முடியும், என்பதற்கு இச்சிறிய நூல் ஓர் எடுத்துக்காட்டாகும்.

தொழிற் சங்க இயக்கம் ஈந்த இந்நூலாசிரியரின் கன்னி முயற்சியைத் தேச பக்தி மிகுந்த ஓர் ஆக்கவேலையாகக் கருதி, தமிழ்ப் பெரியோர்களும், குறிப்பாகத் தந்திப் பிரிவில் பணிபுரியும் தபால், தந்தி, ரெயில்வே ஊழியர்களும் ஊக்குவிப்பர் எனக்கருதுகிறேன். ஆசிரியரின் முயற்சி நனி சிறப்பதாக!

D. ஞானையா.

தோழர் K. M. சந்திரசேகர்

தலைவர், அகில இந்திய தபால் ஊழியர் சங்கம்
3-வது பிரிவு, திருச்சிராப்பள்ளி.

தோழர் சிவலிங்கம் பெருமுயற்சி செய்து தமிழில் தந்தி அனுப்பும் முறையைக் கண்டுபிடித்திருப்பது நமது இலாக்காவிற்கும், திருச்சி மாவட்டத்திற்கும் பெருமை தரும் செய்தி.

அவரது. அறிவாற்றலின் சிருஷ்டியை வேறு சிலர் உடைமையாக்கிக்கொள்ள முயல்வது முறையன்று. நமது இலாகா அதிகாரிகள் இந்த தோழரின் முயற்சிக்கு ஆதரவளித்து ஊக்கமூட்டாதது வருந்தத்தக்கதே.

தாய் மொழியிலேயே நாட்டின் ஆட்சி முறையும் செய்திப் போக்குவரத்தும் நடைபெற வேண்டும் என்ற ஆர்வம் பெருகி வரும் இக்காலத்தில், தோழர் சிவலிங்கத்தின் கற்பனையிலுதித்த இனிய தமிழ்த் தந்தி முறை பெரிதும் பயன் தரும்.

தந்தித் துறையிலே மேலும் பல புதுமைகளைப் புகுத்தவும் இப்புதிய முறையை அதிகார பூர்வமாக அமுலாக்கவும் சர்க்கார் தோழர் சிவலிங்கத்தின் நுண்ணறிவையும், தமிழ் ஞானத்தையும் நன்கு பயன்படுத்திக்கொள்ள முன் வரவேண்டும்.

சந்திரசேகர்
21—1—56.

தோழர் V. துரைராஜ்,
செயலாளர், அனைத்திந்திய தந்தி ஊழியர் சங்கம்,
3-வது பிரிவு, திருச்சிராப்பள்ளி.

'தமிழில் தந்தி' என்ற புத்தகத்தைச சற்று நுட்பத்துடன் படித்தேன் தோழர் சிவலிங்கம் அவர்களுக்குத் தமிழில் உள்ள ஆர்வமும், தமிழில் தந்தி வேண்டும் என்ற முயற்சியும், அதற்கான சிந்தனையும் இப்புத்தகத்தை உருவாக்கின. எந்த மொழியிலும் 'கட, கட்டு' என்ற மார்ஸ் குறிகளை உபயோகித்துத் தந்தியின் பயனைப் பெறமுடியும். ஆனால் 247 எழுத்துக்கள் கொண்ட தமிழுக்கு எங்ஙனம் ஒலிக் குறிகள் அமைக்க இயலும் என்று பெரும்பாலோர் எண்ணியிருக்கக்கூடும். என்னைப் போன்ற ஒரு சிலர், முயற்சி வீணாகிவிடும் என்றுகூட கருதியிருப்பர். ஆனால் இத்துறையில் தோழர் சிவலிங்கம் அவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள். அவர்களின் வெற்றி தமிழ் நாட்டின் வெற்றி. எனவே தமிழ் மக்கள் அனைவரும் அவரின் தொண்டுக்குக் கடமைப்பட்டுள்ளார்கள்.

தந்தித் துறையில் ஓரளவுக்கு உள்ள அனுபவத்தை வைத்து இம்முறையில் சிறிது மாற்றம் தேவை என்று கருதுகிறேன். ஏனென்றால் தந்தியின் நோக்கம் குறுகிய காலத்தில் விரைவில் செய்தி. சில எழுத்துகளுக்கு ஆறு அல்லது ஏழு குறிகள் இருக்கின்றன. கூடுமானவரையில் ஐந்துக்கு மேற்படாமல் இருத்தல் நல்லது. அம்மாதிரி அமைக்க முடியும்.

தமிழகம் தனி மாகாணம் அமைத்து, தமிழ் மொழியில் ஆட்சி நடைபெற வேண்டும் என்று விரும்பும் இந்த நேரத்தில், அரசியல் வானில் செல்வாக்குப் பெற்றவர்களும், பாராளுமன்ற அங்கத்தினர்களும் பாடு பட்டால் நிச்சயமாக தோழர் சிவலிங்கம் அவர்களின் சிந்தனை, முயற்சி ஆகியவற்றின் பயனாக அடைந்த இந்தத் தமிழ்த் தந்தி முறையால் தமிழகம் நன்கு பயன்பெறும்.

வாழ்க தமிழ்! வளர்க அவர்முயற்சி !!

V. துரைராஜ் 25-12-1956.

Com. S. PARASURAM.,
Asst. Secretary
A. I. P. E. Union-Class. III., Tiruchy.

Pudukkottai,
7-7-1955.

தோழர் சிவலிங்கம் அவர்கட்கு

வணக்கம். தங்களுடைய தமிழில் தந்தி முறையைப் பார்த்தவுடனேயே அது எளிதில் பயிலக்கூடியது என்றும், அதன் மூலம் எல்லாத் தமிழ் எழுத்துக்களையும் தவறின்றி அனுப்பவும் வாங்கவும் முடியும் என்றும் அறிந்துகொண்டேன்.

அதன் எளிமை என்னைக் கவர்ந்தது. அம்முறையை முழுதும் பயில ஒரு வாரமும், வேகத்துடன் அதைப் பின்பற்ற 2, 3-மாதங்களும் எனக்கு ஆயின. 'எனது நண்பர் கண்டுபிடித்தது' என்ற பெருமிதத்தின் மூலம் பிறந்த ஊக்கமும், இதற்கு முன்பே எனக்கு ஆங்கிலத் தந்தி-(MORSE)-தெரியும் என்ற உண்மையும் நான் சீக்கிரமே இதைக் கற்றுக்கொண்டேன், என்பதற்குக் காரணங்களாயிருந்திருக்கலாம். ஆனல், புதிதாகக் கற்றுக் கொள்பவர்களுக்கு இம்முறையைக் கற்றுக்கொள்ள 6-ஆறு மாதங்களுக்கு மேல் ஆகாது என்பது என் நம்பிக்கை.

இதன் அனுபவ சாத்தியத்தைப்பற்றி எழக்கூடிய சில சந்தேகங்களுக்கு என் அனுபவத்தின்மூலம் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஆங்கிலத் தந்தியும் தமிழ்த் தந்தியும் ஒருவர் பயின்ருல் தவறுதலாக ஒன்றுக்கொன்று வாங்கவோ அனுப்பவோ செய்வார் என்று கூற முடியாது.

இந்த முறையை எழுத்துக்களின் உருவ (Formation) அடிப்படையில் அமைத்தது மெச்சத்தகுந்தது. இதுவன்றி, இலக்கணஅடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தால், தந்தி வாங்குபவருக்குக் குழப்பத்தை உண்டுபண்ணுவதாய் அமைந்திருக்கும்.

தமிழ் நாட்டில், தமிழ்த் தந்தி அமுலாகும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். தங்களது முறையே சிறந்தது, என்று ஏற்றுக்கொள்ளப்படும் என்று நம்பு கிறேன்.

இப்படிக்கு,
சு. பரசுராம்.

தோழர், ச. கந்தசாமி,
அஞ்சல் நிலையம், விருதுநகர், 16—1—56.

திரு. அ. சிவலிங்கம் அவர்களின் முதல் முயற்சியான தமிழில் தந்தி என்ற புத்தகத்தைப் படித்தேன். தமிழ்ப் புலமையும் தமிழின் உயர்வே தன் பெருநோக்கெனக் கொண்ட அவர் தமிழ் மக்களுக்குச் செய்திருக்கும் அரிய பெரிய சீரிய சேவையாகும் இது. தமிழகம் அவருக்கு என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

எனக்கு மோர்ஸ் முறை தெரியாது. ஆனால் அவர் தமிழ் முறையைப் பயின்றவன் என்ற உரிமையில் சில கூற விரும்புகிறேன்.

அவர் முறை எளிதானது. ஆங்கில முறை தெரியாத நானே 6-மாத காலத்தில் இதைப் பயில முடிந்தது. மோர்ஸ் முறையில் தந்திச் செய்தி அனுப்பவும் வாங்கவும் இந்தியாவில் ஆரம்பித்ததிலிருந்து தமிழ் நாட்டில் எத்தனை யோ தமிழன்பர்களும் தமிழ்ப்பற்றுடையவர்களும் தந்திப் பகுதியில் வேலை பார்த்து வருகிறார்கள். என்றாலும், உயிரினும் இனிய-மங்கை ஒருத்தி தரும் சுகத்திற்கு மேலாகிய-மாத் தமிழான நம் மொழியில் தந்தி முறையைக் கையாள முடியுமா? முடியாதா? என்று எண்ணம் கொள்ளவோ அன்றி சிந்திக்கவோ இல்லை. என்றாலும் ஆ! 247 எழுத்துக்களாயிற்றே!! எப்படி முடியும்? சாத்தியப்படாது! என்று வாளாவிருந்தனரே தவிர செயல்பட்டார்கள் இல்லை. அந்தக் குறையைப் போக்க நான் இருக்கிறேன் என்று தமிழர்களுக்கு ஒரு

பூர்த்தியான தமிழ்த் தந்தி முறையை திரு. அ. சிவலிங்கம்— அஞ்சல் அலுவலகத் தலைவர் அவர்கள் உழைத்துப் பயனை ஈந்திருக்கிறார்கள்.

இந்தத் தமிழ்த் தந்தி முறையை தமிழறிஞர்கள் மட்டுமன்றி தமிழறிந்தோர் எவரும் ஆதரிப்பார்கள். பொது மக்கள் இந்தத் தமிழ்த் தந்தி முறையை தமிழ் நாட்டில் அமுலுக்குக்கொண்டுவர ஒரு நல்ல சூழ்நிலையை உண்டு பண்ணும் முயற்சியில் ஈடுபடுவர் என எண்ணுகிறேன்.

அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென கேட்டுக் கொள்ளுகிறேன்.

ச. கந்தசாமி

தோழர் கருப்பையா, அஞ்சல் நிலையம், அன்னவாசல்.
29–1–56.

நான் ஒரு தபால்காரன். தமிழை எழுதவும் படிக்கவும் தெரியும். இலக்கிய அறிவு கிடையாது. ஆங்கில அறிவோ சொற்பம். எனினும் திரு. சிவலிங்கம் அவர்களின் 'தமிழில் தந்தி' என்ற புத்தகத்தைப் படித்து அறிவதற்கு இவைகள் தடைக்கற்களாக இல்லை. அவர் முறை மிகவும் எளிமையாக அமைந்துள்ளது. ஆங்கில முறை எனக்குச் சிறிது தெரியும். தமிழ்முறை என்னவோ எனக்கு அதைவிட எளிமையாக உள்ளது. என்ன இருந்தாலும் தமிழ் என் தாய்மொழி அல்லவா? நம் தமிழிலேயே தந்தி முறை என்ற களிப்பே அம்முறையை மிக எளிமையாக்கிவிட்டதுபோலும்.

என்னைப்போலவே அவர் முறையை இன்னும் பலர் கற்று வருகிறார்கள் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவரது முறை விரைவில் தமிழகத்தில் அமுலாக்கப்படும் என நம்புகிறேன்.

கருப்பையா,
29—1—56.

நூல் வரிசை எண்: 1878
நன்கொடை எண்: 1878



வாழ்க தமிழ்!

கரம்பக்குடி திருவள்ளுவர் தமிழ் வளர்ச்சிக் கழகம்,
103, ரோவல் ரோடு, சிங்கப்பூர்—8.

7—5—56.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் இவ் விருபதாம் நூற்றுண்டிலும் ஏற்பட்ட புதுமைகள் பலப்பல. தொலைக்காட்சி போன்ற பொருட் செலவு மிக்க புதுமைகள் தவிர மற்றவை அனைத்தும் நமது நாட்டில் உள்ளன. மற்றவையும் புகுந்து பரவும் இப்புதுமைகளை உலகுக்கு அளித்த அறிவியல் அறிஞர்கள் எந்நாட்டினராயினும் நமது நாட்டினர் நன்றிக்கு உரியவரே யாவர். இங்ஙனம் நாம் பார்க்கும் புதுமைகளுள் தந்தியும் ஒன்று ஆனல் தந்தி புதுமையேயாயினும் வளர்ச்சி மிக்க இக்காலத்தில் அது பழமையாகவே போயிற்று.

தந்தி என்பது ஒலிமுறையில் உள்ள பேச்சு மொழி யல்ல. மொழியிலுள்ள எழுத்துக்களுக்குத் தனி ஒலிக் குறிப்பு வைத்து அவ்வொலிக் குறிப்புகளினுல் மொழியை அனுப்பவும் வாங்கவும் உள்ள சாதனமே தந்தி. இதே முறை ஒளி அஞ்சலிலும் (LIGHT SIGNAL) பயன்படுத் தப்படுகிறது. இவ்வாறு ஒலி ஒளி இவ்விரு சாதனங்களி லும் குறிப்புகள்கொண்டு பேச்சு மொழிக்குச் செய்திகளை அனுப்ப நாம் அறிந்திருக்கிறோம். ஆனல் பல்லாயிரம் ஆண்டு களாக வளம் பெற்றிலங்கும நந்தாய் மொழியாம் தமிழ் மொழியில் இச்சாதனத்தை நாம் பயன்படுத்தவில்லை. தமிழில் இவ்வாறு புதுமைகளைக் கையாளுதல் இயலாத காரியம் எனப் பறைசாற்றும் அறிஞரும் இருக்கின்றனர்.

அன்னருக்குப் பதில் கூறும் வகையிலும், தமிழ் மக்கள் யாவரும் பயன்பெறும் வகையிலும் தமிழிலே தந்தி முறை யைக் கையாள வழி வகுத்த அறிஞர் அ. சிவலிங்கம் அவர் கள், பன்னீருயிரும் பதினெண் மெய்யும் ஓராயுதமும் ஆக 31 எழுத்துக்களை உடைய தமிழை இறுநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களுடைய கற்பதற்குக் கடினமான மொழி என

எழுதியும், கூறியும் வந்தனர். இப்படிப்பட்ட மொழியில் புதுமைகளை அமைக்க இயலாது, இயலவே இயலாது எனக் கூறினர்.

மிகவும் எளிய முறையில் தமிழிலுள்ள முப்பத்தோரு எழுத்துக்கொண்டு ஒலிக் குறிப்புகளை ஏற்படுத்தித் தமிழ் முறையைத் தமிழில் பின்பற்ற வழி காட்டிய அ. சிவலிங்கம் எத்தனை நாட்கள் இரவு பகலாகச் சிந்தித்திருப்பாரோ? தந்தி முறை எளிதன்று; ஒலிக் குறிப்புகளைக் கண்டு பிடித்தல் மட்டும் போதாது. செயலளவில் அவ்வொலிக் குறிப்புகள் எவ்வகையில் பயன்படும் என்பதுதான் கேள்வி. பல நாட்கள் இத்துறையில் ஆராய்ந்து அதற்கேற்ப ஒலிக் குறிப்புகளை அழித்தும் மாற்றியும் பயன்படுத்தும் வகையில் கொண்டுவரப் பாடுபட்ட அ. சிவலிங்கம் அவர்களது செயலுக்கு தமிழராகிய நாம் கடமைப்பட்டுள்ளோம். தந்தி முறை கண்டு மகிழ்ச்சியடைந்த நமக்கு நம் மொழியிலேயே அதைப் பயன்படுத்த வழி கிடைத்தது கேட்டுப் பேருவகை யடைகிறோம். அவரது தமிழில் தந்தி முறை வளர்ந்து ஒளி யஞ்சல் இன்ன பிறவகையிலும் வரவேண்டும் என்பது நமது அவா.

புதுமை, தோன்றியது முதல் வளர்ந்து வருகிறது. முதன் முதலில் ஏற்பட்ட வானஊர்தி, மின்சாரக் கருவிகள் மற்றுமுள்ள விஞ்ஞானப் பொருள்கள் ஆகிய இவைகளுக் கும் இன்றுள்ள பொருள்களுக்கும் எவ்வளவோ வேற்றுமையுண்டு. ஆனல் அடிப்படையில் அதிக மாறுதல் இல்லை. அதேபோல் 'தமிழில் தந்தி'யிலும் குறைகள் காணப்படலாம். அக்குறைகள் எவ்விதத்திலும் கண்டுபி டித்தவரின் குறையாகாது. அதைக் கையாளும் நாம்தான் வளர்க்கவேண்டும். ஆகவே வழி காட்டிவிட்டார் எனப் பேசுவதோடு இல்லாமல், அவரது முறையை நாம் கையாளுவோமாக. அதைச் செயலில் காட்டுவோம்! வளர்ப்போம்! இத்துறையில் அரசாங்கம் அதிகக் கவனஞ் செலுத்தவேண்டும்.

கண்டுபிடித்தவரை நாம் வாயாரப் போற்றி நெஞ்சாரப் புகழ்வதால் பயனில்லை அவரது கண்டுபிடிப்புக்கு உயிர் அளிப்பதே பெரும்பயனாகும், இதைததான நாமும் எதிர்பார்க்கிறோம்.

தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும், தமிழருக்கும் பெருமை தேடித்தர உழைத்த அ. சிவலிங்கம் அவர்கள் காரப்பக்குடிக்கும் பெருமை அளித்திருக்கிறார். அவருக்கு வெறும் நன்றி கூறிப் பயனில்லை. அவரது முறை நடை முறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என விரும்புகிறோம்.

---

**திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்,**
**முன்னாள் கவர்னர் ஜெனரல் கருத்து.**

சென்னை,
5—5—55,

வணக்கம்.

என்னைப்போலவே நீங்களும் ஒரு பைத்தியக்காரர் என்று தெரிய வருகிறது. தங்களுடைய தமிழில் தந்தி பார்த்தேன். கடிதமும் வந்தது. மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

கூடியமட்டில் தற்போதைய மார்ஸ் குறிகளை உபயோகித்து கூட்டித்தரவேண்டிய குறிகளை மிக சாமர்த்தியமாகக் கண்டு அமைத்து கச்சிதமாகவும் பூரணமாகவும் வேலை செய்திருக்கிறீர்கள் உங்கள் ஊக்கத்தையும், சாமர்த்தியத்தையும், அறிவு நுட்பத்தையும் பாராட்டுகிறேன்.

ஆனால் ஒரு சந்தேகம். உயிர் மெய் எழுத்தை தமிழ் முறையில் வைத்துக்கொண்டே அமைத்திருக்கிறீர்கள்.

நெடில் உயிர் எழுத்துக்களுக்குத் தேடி எடுத்துப் புதிதாக அமைத்திருக்கிறீர்கள். இந்த ஏற்பாட்டில் தந்தி அடிக்கும் போது எழுத்துக்கும் எழுத்துக்கும் விடவேண்டிய இடம் மிக வளர்கிறது என்பது என் பயம். தவறுகள் அதிகமாக ஏற்படும் என்று அஞ்சுகிறேன். தவறுகள் ஏற்பட்டால் திருத்துவது மிக்க கடினமாக இருக்கும். தமிழை ஆங்கிலத்தில்-அதாவது-ருமானியக் குறிகளை வைத்து எழுதிவிட்டு இதை நீங்கள் கற்றிருக்கும் 'மார்ஸ்' படியே அனுப்பி விடுங்கள் என்றால் வேலையில் அமர்ந்திருப்பவர்கள் சந்தோஷமாக வரவேற்பார்கள். உங்களுடைய ஏற்பாட்டின் படி தமிழ்த் தந்திக்கு அதற்கென்று பயிற்சி பெற்றவர்களே வேண்டுமாகும்.

நான் சொல்லும் முறைக்கு இப்போது யிருக்கும் தந்தி வேலைக்காரர்களே புதுப்பயிற்சி இல்லாமலே வேலை செய்யலாம். புதுப்பயிற்சியும் ஒவ்வொரு பாஷைக்கு ஒரு தனிப் பள்ளிப் பயிற்சியும் வேண்டியிராது.

| | | | |
|---|---|---|---|
| அ | a | எ | e |
| ஆ | aa | ஏ | ay |
| இ | i | ஐ | ai |
| ஈ | ee | ஒ | o |
| உ | u | ஓ | ow |
| ஊ | oo | ஔ | ou |
| க | k | ர | r |
| ச | ch, or s. | ல | l |
| ட | t | வ | v |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| த | th or dh. | ழ | zh | க்ஷ | ksh |
| ப | p | ள | lh | ஸ | s |
| ம | m | ஜ | jh | ஷ | sh |
| ய | ya | | | | |

இந்தப்படி தந்திக்கென்று அமைத்துவிட்டால் போதுமே? அனுப்புமிடத்திலும் சேருமிடத்திலும் தமிழெழுத்தை ருமானியம் ஆக்கிவிடவும், ருமானியத்தை தமிழாக்கவும் சாதாரண ஒரு எழுத்து வேலைக்காரர் அமைத்துவிடுவது எளிதாகும்.

**உதாரணம்:—**

| | |
|---|---|
| இந்தப்படி | தந்திக்கென்று |
| Indhappadi | Thanthikkenru |
| அமைத்துவிட்டால் | போதுமே |
| Amaiththuvittaal | Powdhumay |
| தமிழெழுத்தை | ருமானிய |
| Thamizhezhuththai | Rumaania |
| மாக்கிவிடுவது | மிக |
| Maakkividuvadhu | Miga |
| எளிது | |
| Elhidhu | |

அன்புள்ள

C. RAJAGOPALA CHARI.

குறிப்பு :— திரு. இராஜாஜி அவர்கள் வெளியிட்டுள்ள கருத்து புதிதல்ல. இலங்கைவாழ்தமிழர் தாயகத்திற்கனுப் பும் திருமணச் செய்திகளும், தமிழகத்தில் வர்த்தகத் துறையினர் அனுப்பும் ஒரு சில வர்த்தகச் செய்திகளும் இம்முறையிலேயே அனுப்பப்படுகின்றன. பூவும் மணமும் போல என்பதை Poovum Manamum Pola என்றும், இருபது மூட்டைகள் அனுப்பவும் என்பதை Irupadhu -Mootaikal—Anuppavum என்றும் அனுப்புகிறார்கள்.

அனுப்புமிடத்திலும் சேருமிடத்திலும் தமிழெழுத்தை ருமானியமாக்கவும், ருமானியத்தைத் தமிழாக்கவும் தனியே எழுத்துக்காரர்கள் தேவைப்படுகிறார்கள். இதனால் காலம், பொருள் இரண்டும் ஒருங்கே வீணாகின்றன. இன்னொரு பெருங் குறை இவ்வெழுத்துப்பெயர்ப்பு முறையாலேற் படுகிறது தந்திச் செய்தியை அனுப்புபவர், வாங்குபவர் ஆகிய இருவருக்குமே இது குழப்பத்தை உண்டாக்குகிறது. தந்திச் செய்தி முற்றுப்பெற்றவுடன் அது சரியாக அமைந் துள்ளதாவென்பதை இருவரும் ஒத்திட்டுப் பார்க்கும் நிலை ஏற்படுகிறது. இதனால் காலம் வீணாகிறது. தந்திப் பகுதியில் வேலை செய்யவோ ரனைவருக்கும் ஏற்படுகிற அனுபவம் இது. ஆனால் என் தமிழ் முறையில் இக்குழப்பமும், தெளி வின்மையும் ஏற்படுவதில்லை. காலமும் வீணாவதில்லை.

ருமானிய முறையில் எவ்வளவு விரைவாகச் செய்திகளை யனுப்பமுடியுமோ, அவ்வளவு விரைவாகத் தமிழ் முறை யிலும் அனுப்ப இயலும்.

உயிர் நெடில் எழுத்துக்களுள் ஆ என்பதும் ஒன்று. இவ்வெழுத்துக்கு என் முறையில் இரண்டு ஒலிக்குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆ என்ற எழுத்தை எழுதுவதற்குத் தேவைப்படுகின்ற கால அளவே அவ்விரண்டு ஒலிக்குறியீடுகளுக்கும் இதில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆ என்ற எழுத்துக்கு ஒரே ஒரு ஒலிக்குறியீட்டை அமைத்தால் தந்திச் செய்தி வாங்குபவர் (Receiver) அதை எழுத முடியாது. ஆகவே திரு. இராஜாஜி அவர்கள் அஞ்சுவது போல் எழுத்துக்கு எழுத்து இடம் வளரவும், அதனால் பிழைகளேற்படவும் இடமில்லை.

இதை என் முறையைப் பயின்றவர்களே உறுதி செய்துள்ளனர். 13—8—56ல் ஈரோட்டில் நடைபெற்ற அஞ்சல் ஊழியரின் மாநில மாநாட்டிலும், 7—10—56ல் குழித்தலையில் நடைபெற்ற தமிழாட்சி மொழி மாநாட்டிலும் என் முறையைச் செயற்படுத்திக் காட்டிய போது எத்தகைய பிழையுமேற்படவில்லை என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆங்கில முறையில் ஆங்கில எழுத்துக்கள்தான் பயன் படுத்தப்படுகின்றன. அதே போன்று தமிழ் முறையும் வேற்று மொழியின் துணையின்றி தமிழ் எழுத்துக்களாலேயே இயங்கவேண்டுமென்பதுதான் என் அவா.

வேற்று மொழியின் துணையின்றி இயங்குவதற்குரிய வலிவையும், வளத்தையும் தமிழ் முறை பெற்றிருக்கும் போது, ஆங்கிலமொழியைத் தந்தித் துறைக்கு ஊன்று கோலாகக்கொள்ள வேண்டியதில்லை என்பதே என் திடமான கருத்து.

ஆசிரியன்.

---

**டாக்டர் மு. வரதராசன், M. A., M. O. L., Ph. D.**
தமிழ்ப் பேராசிரியர்,
செல்லம்மாள் தெரு, சென்னை 30. 27—4—56.

---

அன்புடையீர்,

தங்கள் கடிதம் பெற்றேன்.

தங்கள் துறையில் பழகியவர்களுக்கே தங்கள் முயற்சியின் அருமை தெரியும்.

எனினும் தமிழ் முறையிலே எல்லாம் அமைய வேண்டும், தமிழிலே யாவும் நடைபெறவேண்டும். என்ற நோக்கம் தந்தித் துறையிலும் நிறைவேறவேண்டும் ஆதலால் தங்கள் புதிய முயற்சியைப் பாராட்டுகிறேன்.

அன்புள்ள

மு. வரதராசன்.

திரு. ம. பொ. சிவஞானம்
தலைவர் தமிழரசுக்கட்சி

சென்னை
15—12—56.

அன்புடையீர்

வணக்கம். தமிழ்த் தந்தி யென்ற தங்கள் புத்தகம் வரப் பெற்றேன். சர்வ வல்லமை கொண்ட அரசாங்கம் செய்ய வேண்டிய வேலையைத் தாங்கள் தனி மனிதராக மேற் கொண்டதற்கு மகிழ்ச்சி. தங்கள் துணிவைப் பாராட்டுகி றேன்.

எனது ஒத்துழைப்பும் ஆதரவும் எப்பொழுதும் கிடைக் கும்

நன்றி

ம. பொ. சிவஞானம்.

கி. ஆ. பெ. விசுவநாதம்
(தமிழறிஞர்) திருச்சி.

திருச்சி 8—1—57

அன்புள்ள ஐயா,

வணக்கம்.

"தமிழில் தந்தி" என்ற நூல் வரப்பெற்று மிகவும் மகிழ்ந்தேன். தங்களின் முயற்சியைப் பெரிதும பாராட்டு கிறேன். வெற்றிபெறும் காலத்தை விரைவில் எதிர்பார்க்கி றேன்.

தங்களன்புள்ள
கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்ற கிளர்ச்சி வலுவடைந்துவரும் இந்த நாட்களில் திரு. சிவலிங்கம் கண்டு பிடித்துள்ள தமிழ்த் தந்தி முறை அதற்குப் பெரும்

ஆக்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளது. அவரது வெற்றிகரமான முயற்சி தமிழ் மக்களால் என்றும் பாராட்டுதற்குரியது.

தமிழில் தந்திப் போக்குவரத்தை நடத்துவதில் ஈடுபட்டு மிகுந்த சிரமப்பட்டுவரும் இலங்கை அரசினருக்கும் திரு சிவலிங்கத்தின் தந்தி முறையை அறிமுகப்படுத்தி வைக்க விரும்புகிறோம்.

ஈழகேசரி, யாழ்ப்பாணம்.

தமிழகத்தில் தமிழ் மட்டும் படித்தவர்களுக்கு தந்தி வந்தால் ஆங்கிலம் படித்தவரைத் தேடிப் போகிற வேலை தொடக்க நாளிலிருந்து இருந்து வருகிறது. தமிழ்ச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் (ருமானிய முறை) எழுதுகின்ற முறை இங்குக் கையாளப் படுகின்றதென்றாலும் அதில் சில வேளைகளில் பெரிய தடுமாற்றம் ஏற்படவும் இடமுண்டென்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்நூலாசிரியர், தமது அறிவையும் அனுபவத்தையும் கொண்டு பலகாலும் நுணுகி ஆராய்ந்து தமிழ் நெடுங்கணக்கிலுள்ள 247 எழுத்துக்களையும் 32 ஒலிக் குறிகளில் அடக்கித் தமிழ்த் தந்தி முறையைப் புதிதாகக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளார். இவரது முயற்சி பெரிதும்பாராட்டுதற்குரியதாகும்.

'செட்டிநாடு, தேவகோட்டை.

'என்னைப் போலவே நீங்களும் ஒரு பைத்தியக்காரர்' என்று ஆசிரியரைப் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கிறார் ராஜாஜி. இந்தியில் தந்திச் செய்தி அனுப்ப இயலும்போது தமிழில் முடியாதா ? முடியும் என்று முறை சொல்லியிருக்கிறார் ஆசிரியர். பாராட்டத்தக்க முயற்சி.

குமுதம், சென்னை.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்றார் பாரதியார். பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்க்க வேண்டுவது மிக அவசியம். அதிலும் மொழி வாரி மாகாணப் பிரிவினையாகியுள்ள இச்சமயத்தில் **மொழிவளம் குறித்த இச்செயல்** பெரிதும் வரவேற்கத்தக்கது.

........."டைப்ரைட்டரில் தமிழை அமைத்தது போல தந்தியும் தமிழில் அனுப்பலாம்." என்ற உண்மையை வெளியிட்டு ஸ்ரீ அ. சிவலிங்கம் தமிழின் பெருமைக்கு வளர்ச்சி தேடித் தந்துள்ளார்.

**......அரசாங்க ஆதரவு வேண்டும்; மக்களிடமுள்ள உணர்ச்சியும் ஊக்கமும் துணை கொடுக்கும்.**

தமிழில் தந்தி அனுப்பமுடியும் என்பது கண்டு பெருமை யடையதோடு, அதை மனமார வரவேற்கிறோம்.

அது நடை முறைக்கு வந்து வெற்றியாக மலரவேண்டுமென்று விரும்புகிறோம்.

**தமிழ் நேசன், சிங்கப்பூர்:**

ஆங்கிலத்துக்குப் பதிலாகச் சுய மொழிகளைத் தந்திக்கு உபயோகிப்பது சுலபமல்ல. **இலங்கையில் தமிழிலும் சிங்களத்திலும்** தந்திகளை அனுப்ப சில தபால் நிலையங்களில் வசதி செய்யப்பட்டிருந்தாலும், இந்தச் சுய பாஷைத் தந்திகள் அனுப்பப்படுவது ஆங்கிலத்தில்தான். தமிழ் எழுத்துக்களை ருமானிய முறையில் ஆங்கில எழுத்தமைப்பில் மாற்றி அந்த ஆங்கில எழுத்துக்களின் ஒலிக் குறிப்பைத் தந்தியாக அனுப்பி, மீண்டும் ருமானிய முறையில் அதைத் தமிழாக்கித்தான் இந்தச் சுய பாஷைத் தந்தி உரியவருக்குக் கிடைக்கச் செய்கிறார்கள். இதனால் வேலை நான்கு மடங்காகிறது. வீண்கால தாமதமும் ஆகிறது. இந்தச் சங்கடங்கள் எதுவுமில்லாமல் சுலபமாகவும் விரைவாகவும் தமிழிலேயே தந்தியை அனுப்பவும் பெறவுமான

சுருக்கு வழி யொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். திரு. சிவலிங்கம்.'மோர்ஸ்' முறை போலவே அமைந்துள்ள இந்த முறையை விவரிப்பதே 'தமிழில் தந்தி' என்னும் அவரது நூல்.

இலக்கண அடிப்படையில் இல்லாமல் தமிழ் எழுத்துக்களின் உருவ அடிப்படையில் ஒலிக் குறிப்புகளை அமைத்திருப்பது தமிழ்த் தந்தி முறையை மேலும் சுலபமாக்கு கிறது.

தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாகிவிட்ட தற்போதைய சூழ்நிலையில், தமிழ் மொழிக்குச் சகல துறைகளிலும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. தபால் நிலைய அலுவல்களிலும் விரைவில் தமிழே பிரதான இடம் பெறும் நிலை ஏற்படும் பட்சத்தில் திரு. சிவலிங்கத்தின் 'தமிழ்த் தந்தி' முறை பெரிதும் பயன்படக் கூடியதாயிருக்கு மென்பதில் ஐயமில்லை.

—வீரகேசரி

தமிழ்த் தந்தி முறை **ஏட்டளவோடு** நிற்க வில்லை. அது விரைவும், எளிமையும் கொண்டதோடு, பிழையின்றி இயங்குந் தன்மையதென்பதும் **செயல் முறையில்** விளக்கிக் காட்டப்பட்டது.

செயற் படுத்தியதை நேரிற்கண்ட வல்லுநர்கள், அறிஞர்கள் முதலியோர் தெரிவித்த கருத்துக்களும், செய்தித் தாள்களில் வெளிவந்தனவும் உட்புறத்தில் தரப்பட்டுள்ளன.

**ஆசிரியன்.**

## TELEGRAPHY IN TAMIL

Comrade Sivalingam, a member of Tiruchy Branch Union demonstrated before the elite of Erode, the Possibility of sending Tamil messages through Morse Code which was a *Grand Success.*

We wish that the experiment elicits popular support in the future set-up of India.

"Post" New Delhi Aug 56.

## TAMIL TELEGRAPHY DEMONSTRATED

A. Tamil Telegraphy system invented by Com. A. SIVALINGAM of Trichy Postal Branch Union, was demonstrated to the Public and the Press at a open session of the Conference at the Periyar Manram Erode on the 13-8-56 Com. A. Sivalingam was ably assisted by Com. S. Parasuraman. The system of sending Tamil messages through Morse Code *with Precision and speed* was well demonstrated by these comrades which elicited a popular applause from not only the members of the public but also the press representatives.

We appeal to the Department to recognise the Tamil Telegraphy system as we are sure it will receive popular support in Tamil Nad.

"The Postal Worker"
MADRAS Aug 56.

## TAMIL TELEGRAPHY SYSTEM DEMONSTRATED

At the second day's session of the Conference (On Aug. 13) Mr. A. Sivalingan of the Tirchy Postal Division demonstrated a Tamil Telegraphy system, akin to the Morse Code, which he had invented. He was assisted by Mr. S. Parasuraman.

HINDU.

## TAMIL TELEGRAPHY DEMONSTRATED

ERODE Aug 14.

A Tamil Telegraphy system was demonstrated here last night to the public and the Press by its originator, Mr. A. Sivalingam............

Assisted by S. PARASURAMAN, at the other end of the demonstration unit, Mr. SIVALINGAM invited Tamil messages from the Public and also Press telegrams from the correspondents and telegrammed them to the other end of the circuit.

—INDIAN EXPRESS.

## தமிழில் தந்தி முறை

### ஈரோட்டில் நிதர்ஸன விளக்கம்

............ஏராளமான பொது மக்களும் மிக ஆர்வத்துடன் இதைக் கண்டனர். ஸ்ரீ அ. சிவலிங்கம் கூட்டத்தினரிடமிருந்தும் செய்தி நிருபர்களிடமிருந்தும் வாங்கிய தந்திகளை அனுப்பியும் வாங்கியும் நடைமுறையில் காண்பித்தார்.

— தினமணி

தமிழ் மொழியிலேயே தந்திகளை அனுப்பவும் வாங்கவும் ஓர் எளிய முறையை முதன் முதலாகக் கண்டுபிடித்த ஸ்ரீ அ. சிவலிங்கம் ............... கூட்டத்தினரிடமிருந்தும், செய்தி நிருபர்களிடமிருந்தும் வாங்கிய தந்திகளை அனுப்பியும் வாங்கியும் நடைமுறையில் காண்பித்தார்.

— சுதேசமித்திரன்

## தமிழில் தந்தி அனுப்பும் முறை

"மோர்ஸ்' போன்று தமிழ் மொழியிலேயே தந்திகளை அனுப்பவும் வாங்கவும் ஓர் எளிய முறையை முதன்

முதலாகக் கண்டுபிடித்த ஸ்ரீ அ. சிவலிங்கம் அந்த முறையை ....தமிழ் மொழியில் எவ்வாறு தந்தி அனுப்பவும் வாங்கவும் முடியுமென்பதைக் விளக்கிக் காட்டினார்..........

"நவஇந்தியா"

தமிழில் தந்தி
திரு. சிவலிங்கம் சாதனை
ஈரோடு ஆக. 14

......தமிழிலேயே தந்திகளை அனுப்பவும் வாங்கவும் சுலபமான முறையை திரு. அ. சிவலிங்கம் அவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்....அதன் நடைமுறை அனுபவத்தையும் விளக்கிக் காட்டினார்.

——ஜனசக்தி.

தமிழில் தந்தி
(குழித்தலை தமிழாட்சி மொழி மாநாடு)

அ. சிவலிங்கமும் பரசுராமனும் தமிழில் தந்தி அனுப்பும் முறையைச் செய்து காட்டினார்கள். தமிழில் தந்தி அடிக்கும் முறையை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

—தினத்தந்தி

திரு. ஞா. தேவநேயன், வாசகன்,
திரவிட மொழியாராய்ச்சித் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

Annamalai University.
Annamalainagar
9—10—56

யான் சென்ற ஆண்டு புதுக்கோட்டை சென்றிருந்த போது, மேலைச் சிவபுரி அஞ்சல் நிலையத் தலைவர் திருவாளர் அ. சிவலிங்கனார் தாம் நீண்ட நாளாக ஆய்ந்து வெற்றி கண்ட தமிழ்த் தொலைவரி முறையைப் பற்றித் தமிழில்

வெளியிட்டுள்ள ‘தமிழில் தந்தி’ என்னும் சுவடியின் ஒரு படியை எனக்குத் தந்து அதைப்பற்றி என் கருத்தைத் தெரிவிக்கச் சொன்னார். தொலைவரி எனக்குப் புறம்பான துறையாகலின், புரிவியல் (Practical) இல்லாமல் தெரிவியலால் (Theory) மட்டும் ஒரு முடிபுகொள்ள முடியவில்லை.

சென்ற 7–10–56 அன்று குழித்தலையிற் கூடிய தமிழாட்சி மொழி மாநாட்டில் திருவாளர் அ. சிவலிங்கனாரே மேடைமேல் தொலைவரிப் பொறியமைத்து, பொது மக்கள் எழுதிக்கொடுத்த பல செய்திகளை **விரைவாகவும் பிழையின்றியும்** அடித்துக் காட்டியதால், எனக்கு அதில் முழு நம்பிக்கையும் அதுபற்றிப் பெருமகிழ்ச்சியும் உண்டாகியிருக்கின்றன.

தமிழ் நாட்டில் தமிழாட்சி தொடங்கும் அரசியலார் இம்முறையை உடனே கையாள்வதுடன், திருவாளர் அ. சிவலிங்கனார்க்குத் தக்கதொரு பெரும் பரிசும் அளித்தல் வேண்டும். அது அவர் கடன்.

ஞா. தேவநேயன்.

**பாரதிதாசன்**
95 பெருமாள் கோவில் தெரு, புதுச்சேரி — **நாள் 11—10—1956.**

சென்ற வாரம் என் தலைமையில் நடைபெற்ற குழித்தலைத் தமிழ் ஆட்சி மொழி மாநாட்டில்,

திரு. அ. சிவலிங்கம் “தமிழ்த் தந்தி” நிகழ்ச்சி நடத்திக் காட்டினார்.

அவையுளார் எழுதித் தந்த தமிழ் வரிகளைத் தந்தியனுப்பி வாங்கிக் காட்டினார்.

மற்றும் அவர் வெளியிட்டிருந்த தமிழ்த் தந்தி நூலையும் படித்துப் பார்த்தேன்.

அதுபற்றி அவரிடம் பேசி, அவர் முறையை ஆராய்ந் தேன்.

தமிழ்த் தந்திக் கண்டுபிடிப்புக்கு உரியவர் அ. சிவ லிங்கம் ஒருவரே. தமிழ்த் தந்தி முறை செயற்படுத்தப்படு மானல், அதனல் வரும் புகழுக்கு அ. சிவலிங்கம் தனி யொருவரே உரியவர்.

**பாரதிதாசன்.**

**திரு. அ. கசபதி நாயகர்**
பி. ஏ., பி. எல்., எம். எல். சி.
**(ஓய்வுபெற்ற மாவட்ட நடுவர்.)**
தலைவர்.
**தமிழர் பேரவை, சென்னை 23.**

திரு. சிவலிங்கம் அவர்களுக்கு,
வணக்கம்

....தந்தி தமிழில் வழங்கப்பட்டிருப்பின், தமிழிலேயே உங்களுக்குத் தந்தி அனுப்பியிருப்பேன். நம் தமிழ் நாட்டில் தமிழ் மொழி ஆட்சி மொழி ஆகிவிட்டது என்று பெரு மிதத்தோடு சொல்வதுடன், நமது தமிழ் எட்டளவில் நிற் காது. **கம்பி வழியிலும் காளம் செய்யவேண்டுமென்று** வேண்டிக்கொள்கிறேன்.

**கசபதி.**

# உள்ளுறை


1. ஒலிக்குறிகளின் விவரம்

2. நெட்டெழுத்துக்களும், ஆய்த எழுத்தும்

3. ரு, ஞு, கௌ, ஐல போன்ற எழுத்துக்கள்

4. குற்றெழுத்துக்கள், க முதல் ன ஈருக உள்ள உயிர் மெய்யெழுத்துக்கள் முதலியவைகளின் ஒலிக் குறிகள்

5. கொம்புக் குறிகள், உ, ஊ ஒலியில் முடியுஞ் சொற்கள்

6. வடவெழுத்துக்கள்

7. தந்திச் செய்திகளை அனுப்பும் முறை

8. வாழ்த்துத் தந்திகள்

9. இரகசியத் தந்திகள்

10. சுருங்கிய ஆங்கில எழுத்துக்களுக்கேற்ற தமிழ் எழுத்துக்கள்

# பாடம் 1

ஆங்கிலத்தில் உள்ள ஒலிக் குறியீடுகளே பெரும்பாலும் இம்முறையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கில எழுத்துக்கள் 26 அவ்விருபத்தாறு எழுத்துக்களைக் கொண்டே ஆங்கில முறை அமைந்துள்ளது. ஆங்கில முறையை முதன்முதலில் 1837ல் கண்டுபிடித்துப் பாருக்குதவிய பெருமை திரு. மோர்ஸ் என்பவரைச் சாரும். இம்முறை இந்தியாவுக்கு வந்து சுமார் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது.

தமிழில் உயிர் எழுத்துக்கள் 12. மெய்யெழுத்துக்கள் 18. உயிர்மெய் எழுத்துக்கள் 216. ஆய்த எழுத்து 1. ஆக தமிழ் நெடுங்கணக்கிலுள்ள மொத்த எழுத்துக்கள் 247.

உயிர் 12. மெய் 18. ஆக 30 எழுத்துக்களையும் முதலெழுத்துக்களென்று கூறுவர். உயிர்மெய்யெழுத்துக்களிருப்பதால்தான் நம் மொழி எளிதில் இயங்குகிறது. உயிர்மெய் யெழுத்துக்களைத் தவிர்த்து மேற்கூறிய 30 முதலெழுத்துக்களைக் கொண்டு மட்டும் தமிழ்த் தந்தி முறையை அமைத்தால், குழப்பம் குடிபுகுவதோடு பிழைகளும் மலியும். தந்திச் செய்தியை அனுப்பலாம்; ஆனால் வாங்க முடியாது. 'தந்தி' என்ற சொல்லை முதலெத்துக்களைக்கொண்டே தந்தியிலனுப்ப வேண்டுமாயின், த்அந்த்இ என அனுப்ப வேண்டும். எழுதுபவர் முதலில் த் அனுப்பப்படும்போது அதை மனதில் வைத்திருந்து பிறகு அடுத்துவரும் 'அ'வைக் கேட்ட பின்னர் 'த' என எழுதிக்கொள்ள வேண்டும். 'த் ஆ ங் க் அ ள் எ ப் ப் ஒ ழ் உ த உ வ் அ ந் த் ஈ ர் க் அ ள்' என்று ஒருவர் பேசினால் கேட்பவர் தம் நினைவாற்றலால் 'தாங்கள் எப்பொழுது வந்தீர்கள்' என்று மனத்திலேயே விரைவாக உருவாக்கிக்கொள்வதென்பது எவ்வளவு சிக்கலோ அதைவிடப் பன்மடங்கு சிக்கல்கள் எழுத்துக்களின் ஒலியைக் கேட்காது 'கட' 'கட்டு' ஒலிகளைக் கேட்டே எழுத்துக்களை எழுதவேண்டியுள்ள தந்தித் துறையிலேற்படும். எனவே உயிர்

மெய் யெழுத்துக்களுக்குத் தனியே ஒலிக் குறிகள் கொடுத்துள்ளேன். மேலும் வரி வடிவத்தை—அதாவது நாம் இயல்பாக எழுதுகின்ற முறையை — அடிப்படையாகக் கொண்டுள்ளதால், இம்முறை எளிதாகவும் விரைவாகவும் இயங்கமுடிகிறது.

தமிழில் உள்ளதைப் போன்ற சிக்கல்கள் ஆங்கிலத்தில் இல்லை. 'ழ' கரம் போன்ற சிறப்பொலியும், ர, ற, ல, ள, ந, ன வேறுபாடுகளும் அதில் இல்லை. இக்காரணங்களினாலோ என்னவோ, தமிழ் மொழியில் செய்திகளனுப்பும் முறைகாண எவரும் கவலைகொண்டதாகத் தெரியவில்லை.

தமிழ் முறையில் கூடியவரை சிக்கல்கள் எல்லாம் தவிர்க்கப்பட்டுள்ளன. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள மொத்த ஒலிக் குறிகள் 33.

அராபிய இலக்கங்களுக்கே (தற்போது எல்லோரும் பயன்படுத்தும் முறை) ஆங்கில முறையில் ஒலிக்குறிகள் அமைந்துள்ளன. அரபி எண்களே உலகெங்கும் கையாளப்படுகின்றன. தமிழ் எண்களான க, உ போன்றவை படிப்போர்க்குச் சிக்கல்களை உண்டாக்குவதன்றி அவ்வெண்களின் வடிவத்தைப் பெற்றுள்ள தமிழ் எழுத்துக்கள் உள்ளமையின் குழப்பத்தையுமுண்டாக்கும். எனவே அரபி எண்களும் அவைகளுக்கு ஆங்கில முறையிலுள்ள ஒலிக்குறிகளுமே தமிழ் முறையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| **தமிழ் முறையில்** | ஒலிக்குறிகள் |
|---|---|
| உயிர் எழுத்துக்கள் | 5 |
| உயிர்மெய் எழுத்துக்கள் | 18 |
| எழுத்துக்கு முன்வரும் கொம்பு சிறியது 'ெ' | 1 |
| ,, பெரியது 'ே' | 1 |

எழுத்தின் மேற்புறத்தில் எழுதப்படும் கொம்பு சிறியது (கி) } 1

எழுத்தின் மேற்புறத்தில் எழுதப்படும் கொம்பு பெரியது (கீ) } 1

'உ'ஒலியில் முடியும் எழுத்து ('கு' 'பு') 1

'ஊ'ஒலியில் முடியும் எழுத்து ('கூ' 'பூ,) 1

'கை'போன்ற எழுத்துக்களில் காணப்படும் 'ை' என்ற இரட்டைக் கொம்பைக் குறிக்கப் பயன்படும் ஒலிக் குறி } 1

'கா'என்ற எழுத்தில் 'க'வுக்குப பக்கத்திலுள்ள 'ா' என்ற குறியைக் கால் என்பர். பேச்சு வழக்கில் கால் வாங்குதல் என்பர்.

ா' 'கால் வாங்கும் குறி) என்பதைக் குறிக்கப் பயன்படும் ஒலிக் குறி } 1

மெய்யெழுத்தை காட்டும் புள்ளியைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒலிக் குறி } 1

க்ஷ, ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ ஆகிய ஆறு வடமொழி எழுத்துக்களையும் குறிக்கப் பயன்படும் பொதுக் குறி } 1

ஆக மொத்தம் 33

இவைகளை நீங்கள் படித்தவுடனே 33 ஒலிக்குறிகளில் தமிழில் செய்திகள் அனுப்பும் முறை எங்ஙனம் அடங்கி விடுகிறதென்பதை நன்குணர முடியும்.

## ஒலிக்குறிகளை இன்னும் குறைக்க முடியுமா?

ஒலிக் குறிகளை இன்னும் குறைக்க முடியும். ஆங்கில முறையில் எழுத்துக்களுக்கு 26 ஒலிக் குறிகள்தான் உள்ளன. அதைப் போலவே தமிழ் முறையிலும் செய்ய வியலுமா என சிலருக்குக் கேட்கத் தோன்றும். செய்ய முடியுமென்பது மட்டுமல்ல; அதைவிடக் குறைவான ஒலிக் குறிகளைக் கொண்டே அமைக்கவும் முடியும்.

எடுத்துக்காட்டாக ங, ஞ, ண, ந, ம, ன முதலிய மெல்லின எழுத்துக்களை ஒரு புதுமுறையால் ஓரே ஒரு **பொதுக்குறியால்** குறிக்கவியலும் ●—●— என்பதைப் பொதுக் குறியாகக்கொள்வோம். 'ங'ஐ அனுப்பவேண்டு மானால் முதலில் பொதுக் குறியாகிய ●—●— என்பதை அடிக்கவேண்டும். அதற்குப் பின்னால் ங, ஞ, ண, ந, ம, ன ஆகிய எழுத்துக்களுள் ஒன்று தொடர்கிறது என்பதை அது உணர்த்துகிறது. பிறகு தந்தி அனுப்புபவர் 'ங்'வுக்கு முதலாகவுள்ள 'க'வை அனுப்பவேண்டும். இவ்விரண்டையும் கேட்ட பின்னர், தந்தி வாங்குபவர் 'ங' என எழுத வேண்டும்.

இவ்வாறே ஞ, ண, ந, ம, ன எழுத்துக்களுக்கு ●—●— என்ற பொதுக் குறியும் அவைகளுக்கு முதலாக வுள்ள ச, ட, த, ப, ற முதலிய எழுத்துக்களுக்குரிய ஒலிக் குறிகளும் அனுப்பப்பட வேண்டும். இம்முறையை அடிப் படையாகக் கொண்டு ர, வ, ள போன்ற வேறு பல எழுத்துக்களுக்கும் தனித்தனியே உள்ள ஒலிக் குறிகளைக் குறைத்துவிட்டால் ஒலிக் குறிகளின் எண்ணிக்கை ஆங்கில முறையிலுள்ளதைவிடக் குறைந்துவிடுகிறது!

பாடம் 5ல் வடமொழி எழுத்துகளுக்குமட்டும் பொதுக் குறி முறை கையாளப்பட்டுள்ளதெனினும், அது மேற் கூறியது போலல்லாது, வரிவடிவ அமைப்பில் அமைந் துள்ளதைக் காணலாம். மேலும் **வடவெழுத்துக்கள் தமிழில்** அடிக்கடி வாராதவையாகலின், இம்முறை எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் குறைவின்றி இயங்க முடிகிறது.

## மற்ளுெரு முறை

— என்பதைப் பொதுக் குறியாகக் கொள்வோம். ட, ர, இவைகளுக்குரிய ஒலிக்குறிகளை முதலில் அனுப்பி பிறகு — என்ற பொதுக் குறியை அனுப்பினால் ப, த என எழுதிவிடலாம்.

## ஒலிக் குறிகளை இணைக்கும் முறை

ஒலிக் குறிகளை இணைக்கும் முறையாலும் ஒலிக் குறிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.

'ெ' என்ற கொம்புக்குள்ள ●● என்ற ஒலிக்குறிகளை இரண்டு முறை அனுப்பினால், 'ெெ' என்று எழுதாது 'ை' என்று எழுதிவிடலாம். 'ை' என்பதன் வரிவடிவத்தில் இரண்டு கொம்புகள் இணைந்திருப்பதைக் காணலாம்.

இவ்விணைப்பு முறையிலும் குழப்பம் ஏற்பட இடமுண்டு. எடுத்துக்காட்டாக 'ஸெரினீக்கா' என்ற சொல்லிலுள்ள 'ஸ' என்ற எழுத்தை அனுப்பும்போது 'ெ' என்பதற்குரிய ஒலிக் குறியை முதலில் அனுப்பவேண்டியுள்ளது. அப்பொழுது முதல் எழுத்தை 'ை' என்று தவருக எழுத நேரிடும்.

இப்படிப் பல்வேறு முறைகளையும் கையாண்டு தமிழ்த் தந்தி முறையை **இருபதுக்கும் குறைவான ஒலிக் குறிகளில் அமைக்க முடியும்! ஆனால் நான் அதைச் செய்ய விரும்பவில்லை.** பொதுக் குறி முறையை மருந்து போன்று பயன்படுத்த வேண்டுமே யொழிய, ஒலிக் குறிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற் கெனவே அதைக் கையாண்டால், தமிழ்த் தந்தி முறையை ஆமையும் பார்த்துச் சிரிக்கும்! தமிழ்த் தந்திக்கு மட்டு மன்றி, வேறு எம்மொழிக்கும் இது பொருந்தும்.

தந்தி முறையில் ஒலிக் குறிகளின் எண்ணிக்கையைக் குறைப்பது சிறப்பெனினும், **வரி வடிவங்களின் அமைப்பு, எளிமை தெளிவு, விரைவாக இயங்குந் தன்மை** ஆகிய இவைகளைக் கெடுப்பனவாயிருத்தலின், அம்முறைகளை யெல்லாம் தவிர்த்துள்ளேன்.

# பாடம் 2

உயிர் எழுத்துக்கள் 12. ஆனல் 5 எழுத்துக்களுக்குத் தான் ஒலிக் குறிகள் இம்முறையில் தனியே தேவைப்படு கின்றன. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ முதலிய ஏழு நெட் டெழுத்துக்களுக்கும் தனியே ஒலிக்குறிகள் கிடையா.

அ, இ, உ, எ, ஒ முதலிய ஐந்து குற்றெழுத்துக்களின் பின்னே கால் வாங்கும் குறிக்குள்ள ஒலிக்குறிகளையனுப் பினல், தந்தியை வாங்குபவர் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்று எழுத வேண்டும். ஏனெனில் தந்தியை அனுப்புபவர் அா, இா, உா, எா, ஒா என்றனுப்பினலும் அததகைய எழுத்துக்கள் தமிழில் கிடையாதல்லவா ?

'ஈ' என்ற எழுத்து 'இ' என்றே இம்முறையில் எழுதப்படும். அதனல் தமிழ் மொழி எவ்விதத்திலும் குன்ருது. குற்றெழுத்தாகிய 'இ' என்ற எழுத்தினின்று முற்றிலும் மாறுபட்ட வரிவடிவத்தைக் கொண்டுள்ள 'ஈ' யைத் தவிர்த்து 'இ' என்ற எழுத்தைக்கொள்வதே பொருந்த முடைத்தென ஆராய்ச்சியாளர் கூறுவது நினைக்கற்பாலது, மேலும் தந்தித் துறையில் குறுகிய காலத்தில் எளிதாக 'இ' எழுத்தை எழுத முடியும். ஆங்கில முறையில் A O இவை களுக்குள்ள ஒலிக் குறிகளே அ, ஒ முதலிய எழுத்துக்களின் ஒலிக் குறிகளாக வைக்கப்பட்டுள்ளன.

'ஔ' என்ற எழுத்துக்காகத் தனியே ஒலிக்குறிகள் இம்முறையிலில்லை. 'அ' 'வ்' என்ற இரண்டு எழுத்துக் களைப் பயன்படுத்தியோ அன்றி 'ஒ' 'ள' இவைகளுக்குள்ள ஒலிக்குறிகளைத் தனித்தனியே பயன்படுத்தியோ, ஔ எழுத்தைப் பெறலாம்.

'ஐ' என்ற எழுத்துக்கும் தனியே ஒலிக்குறி இல்லை. 'அ' 'ய்' என்ற இரண்டெழுத்துக்களினலேயே 'ஐ' குறிக் கப்படுகிறது.

ஃ என்ற ஆய்தவெழுத்து பெரும்பாலும் பயன்படுத்தப் படுவதில்லை, எனினும் எஃகு போன்ற நடைமுறையில் வழங்குகின்ற சொல்லையும், கஃசா, அஃகாமை, வெஃகாமை, பஃறொடை போன்ற இலக்கியச் சொற்களையுங் குறிக்க இது பயன்படுகிறது.

'Frederic' என்ற பெயரை இப்பொழுது 'பிரடரிக்' என்றெழுதுகிறோம். 'பி' எழுத்தை 'F' போன்று ஒலிக்க ஃ ஐ முன்னே எழுதும் பழக்கம் இப்பொழுது பரவி வருகிறது.

ஃபிரடரிக் — செஸ்டர்ஃபீல்டு.
ஆகவே ஆய்த எழுத்தும் இம்முறையில் இடம் பெற்றுள்ளது.

ஃ ஐக் குறிக்க இரண்டு முறை முற்றுப்புள்ளிக்குரிய ●● ●● ●● குறிகளையனுப்பினால் தந்தி வாங்குபவர் இரண்டு முற்றுப்புள்ளிகளை ●● என்று குறிப்பதோடு இரண்டாவது முற்றுப்புள்ளியை எழுதியவுடனே மேற்புறத்திலும் ஒரு புள்ளியை அமைக்க வேண்டும். இவ்வாறு ∴ ஐ எளிதில் பெறலாம்.

ஆய்தவெழுத்து முதலில் புள்ளி வடிவத்தையே பெற்றிருந்தது. பிறகுதான் இப்பொழுதுள்ள சுழியிட்டு எழுதும் வடிவத்தைப் பெற்றது. ஆய்தவெழுத்து முன்னர் முப்புள்ளி எனப்பட்டது. (தொல். எழு. நூ. எண் 2)

தமிழ்த் தந்தியில் ஆய்தம் பழைய முறையிலேயே முப்புள்ளி வடிவால் குறிக்கப்படுகிறது.

## பாடம் 3

இம்முறையில் ங, ஞ, ண போன்ற எழுத்துக்களைத் தவிர்த்திருக்கலாம். ர, ற என்ற இரண்டனுள் ஏதேனும் ஒன்றைத் தவிர்த்து, ஒன்றைமட்டும் வைத்துக்கொள்ளலாம். ஆனால், இம்மாற்றங்கள் தமிழ் மொழிக்குத் தீங்கு

மயக்குமோ என்றஞ்சி செய்யப்படவில்லை. மேலும் இம் மாற்றங்கள் செய்யப்பட்டால், இலக்கியச் செய்திகள் மட்டுமன்றி பாமர மக்கள் அனுப்பும் செய்திகளும், அவைகளின் இயல்பான உருவத்தில் போய்ச் சேரமாட்டா. ஆகையால், இவைகளுக்கும் தனியே ஒலிக் குறிகள் வழங்கப்பட்டுள்ளன.

'க' முதல் 'ன' ஈறாக உள்ள 18 எழுத்துக்களுக்குமே, தனி ஒலிக்குறிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆங்கில எழுத்துக்கள் K, S, D, N, P, M, R, L, V இவைகளுக்குரிய ஒலிக்குறிகளே க, ச, ட, ந, ப, ம, ர, ல, வ முதலிய தமிழ் எழுத்துக்களுக்குரிய ஒலிக்குறிகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. ஆங்கில முறையை அறிந்தவர்கள், இதை ஒத்து நோக்கி உணரலாம்.

ணை, லை, போன்ற எழுத்துகளுக்குத் தனியே ஒலிக் குறிகள் கிடையா. அவைகள் ணை, லை, என்றே இம் முறையில் குறிக்கப்படும். கி. பி. 900க்குப் பின்னரே ணை, லை எழுத்துக்கள் ணை, லை ஆக மாற்றமடைந்தன என கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

கௌ, சௌ போன்ற எழுத்துக்களுக்கும் தனியே ஒலிக்குறிகள் கிடையா. ெ க ள ஆகிய மூன்றிற்கும் இம் முறையில் தனித்தனியே ஒலிக்குறிகள் கொடுக்கப் பட்டுள்ளன. அவ்வொலிக் குறிகளையே தனித்தனியே பயன்படுத்தி 'கௌ' என்ற எழுத்தைப் பெறவேண்டும். 'க' 'வ்' என்ற இரண்டு எழுத்துக்களை இணைத்தாலும் 'கௌ' என்ற எழுத்தைப் பெறலாம்.

கௌ, சௌ, மௌ முதலிய எழுத்துக்களுக்குத் தனித்தனியே ஒலிக்குறிகள் அமைப்பின், இம்முறையில் ஒலிக்குறிகள் பெருகும். கற்பவர் இடர்ப்படுவர்.

றா, னா, என்ற எழுத்துக்களும் இம்முறையில் றா, னா என்றே எழுதப்படும்.

# பாடம் 4

## ஒலிக்குறிகள்

| | |
|---|---|
| அ | ● — |
| இ | — — — — |
| உ | ● ● — |
| எ | — ● — ● |
| ஒ | — — — |
| க | — ● — |
| ங | ● — — — |
| ச | ● ● ● |
| ஞ | — — ● ● |
| ட | — ● ● |
| ண | ● ● ● ● |
| த | ● ● — ● |
| ந | — ● |
| ப | ● — — ● |
| ம | — — |
| ய | ● — — |
| ர | ● — ● |
| ல | ● — ● ● |
| வ | ● ● ● — |
| ழ | — — ● — |
| ள | — ● ● ● |
| ற | — ● ● — |
| ன | — ● — — |

கால் வாங்கும் குறியைக் குறிக்க :—

'ா' ● ● — —

மெய்யெழுத்து ஒற்றெழுத்தென்றும் சொல்லப்படும். தமிழ் மொழியில் இது ஒரு புள்ளியால் குறிக்கப்படுகிறது. ('க்')

இப்புள்ளியைக் குறிக்கும் ஒலிக்குறி ●

இது ஆங்கிலத்தில் E என்பதன் ஒலிக்குறியாகும்.

# பாடம் 5

நான்காவது பாடத்தில் பல எழுத்துக்களுக்குரிய ஒலிக் குறிகளைக் கற்றுணர்ந்தீர்கள். இப்பாடத்தில் எழுத்துக்கு முதலில் வரும் சிறிய, பெரிய கொம்புகள், எழுத்தின் மேற்புறத்தில் வரும் கொப்புக் குறிகள், இரட்டைக் கொம்பு ஆகியவைகளைப் பற்றியும் 'உ' 'ஊ' முதலிய ஒலிகளில் முடியும் எழுத்துக்களை எங்ஙனம் தமிழ்த் தந்தி முறையில் காட்டுவது என்பது பற்றியும் அறிவோம்.

தனிக் கொம்பு (சிறியது) 'ெ' ● ● (இது ஆங்கில முறையில் 'I' என்பதன் ஒலிக்குறிகள்)

தனிக் கொம்பு (பெரியது) 'ே' — — ● ● —

மேற்புறக் கொம்பு (சிறியது, குறில் 'ி') } — — ●

(இது ஆங்கில முறையில் 'G'க்குள்ள ஒலிக்குறி.)

மேற்புறக் கொம்பு (நெடில்-பெரியது 'ீ') } — — — ●

'உ' ஒலியில் முடிந்தால் ● — ● ● — ● (ர+ர)

'ஊ' ஒலியில் முடிந்தால் — ● ● — ● ● (ட+ட)

இவ்வொலிக்குறிகளைச் சற்று விரைவாக அனுப்ப வேண்டும்.

கு, கூ என்ற எழுத்துக்களைத் தந்தியிலனுப்பவேண்டுமாயின் முதலில் 'க'வையும் பிறகு 'உ' அல்லது 'ஊ' ஒலிகளுக்குரிய ஒலிக்குறிகளையும் அனுப்பவேண்டும். தந்தியை வாங்குபவர் முதலில் 'க'வை எழுதி, அதன் பின்னர் அனுப்பப்படும் ஒலிக்குறிகளுக்கேற்ப 'கு' அல்லது 'கூ,வாக அதை ஆக்கவேண்டும்

எடுத்துக்காட்டு—முதலில் 'க'

பின்னர் கு அல்லது கூ

'ை' என்ற இரட்டைக் கொப்பு (கை) — ● — — ● ●

இதுவரையில் தமிழ் மொழிக்குரிய எல்லா எழுத்துக்களைப் பற்றியும் அறிந்தோம்.

எல்லாம் தமிழில் இருக்கவேண்டும்; நம் தமிழகத்தில் ஆட்சி மொழி தமிழாகவே இருக்கவேண்டுமென்று அறிஞர்கள் முழங்குகின்றனர். செய்தித் தாள்களும் இக்கருத்தைப் பறைசாற்றுகின்றன. இதை எல்லோருமே வரவேற்பர்.

இக்கோரிக்கை முறையற்றதென எவரும் கூறுர். ஆங்கிலம் போன்ற பிறமொழியை இனியும் அரியணையிலமர்த்த வேண்டாம் என்பது தான் இக்கோரிக்கையின் கருத்தே யொழிய, பிறமொழிச் சொற்கள் கலக்காது தமிழைப் பயன்படுத்தவேண்டுமென்பதே இதன் கருத்தென யாவரும் தவருக எண்ணக்கூடாது. கூடிய வரை தமிழ்ச் சொற்களைக் கையாளவேண்டும்; பிறமொழிச் சொற்கள் சிற்சில கருத்துக்களை எளிதாகவும் தெளிவாகவும் புலப்படுத்துமானுல் அவைகளைப் பயன்படுத்தவும் தயங்ககூடாதென்பதே பெரும்பாலான தமிழறிஞரின் கருத்து.

தற்போதைய நிலையில் க்ஷ, ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ போன்ற எழுத்துக்கள் தமிழில் கலப்பதைப் புறக்கணிக்க முடியாது க்ஷத்திரியன், ஜான் மோர்ஸ், ஷாஜஹான், ஹெலன், ஸ்ரீமுஷ்ணம். முதலிய பெயர்களைக் குறிக்க வடவெழுத்துக்கள் இன்றியமையாதென என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆகையால் இவ்வெழுத்துக்களும் தமிழ்த் தந்தி முறையில் இடம் பெற்றுள்ளன

க்ஷ, ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ இவைகளுக்குப் பயன்படுத்தப்படும் பொதுக் குறி —

இது ஆங்கிலத்தில் T என்பதன் ஒலிக்குறியாகும். க்ஷ, ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ என்ற வடயெழுத்துக்களின் வரிவடிவங்கள் க, ள, ெ, உ, வ, ப முதலியவைகளின் அடிப்படையில் அமைந்துள்ளதைக் காணலாம். எனவே, அத்தமிழெழுத்துக்களின் பின்னே தனியாகப் பொதுக் குறியாகிய — அனுப்பப்படின் அவைகளையே க்ஷ, ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ என எழுதிக்கொள்ளவேண்டும்.

இம்முறையில் வடவெழுத்துக்களை எழுதுவது எளிதென்பதைப் பயில்வோர் நன்குணரலாம்.

Bracket எனப்படும் அடைப்புக்குறி ( )
அடைப்புக்குறி — ● — — ● —
(ஆங்கில முறையிலும் இதே ஒலிக்குறிகள் தான்)

முற்றுப்புள்ளி ● ● ● ● ● ● அல்லது மூன்று முறை 'அ' க்குள்ள ● — ● — ● — ஒலிக்குறிகளையனுப்பினால் அ அ அ என எழுதிக்கொள்ளவேண்டும்.

(ஆங்கில முறையிலும் இவ்வொலிக்குறிகள் தான் பயன்படுகின்றன)

எண்களைக் குறிக்கப் பின்வரும் ஒலிக்குறிகளைப் பயன்படுத்தவும் ஆங்கில முறையிலும் இவைகளே கையாளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 0 | — — — — — | 6 | — ● ● ● ● |
| 1 | ● — — — — | 7 | — — ● ● ● |
| 2 | ● ● — — — | 8 | — — — ● ● |
| 3 | ● ● ● — — | 9 | — — — — ● |
| 4 | ● ● ● ● — | | |
| 5 | ● ● ● ● ● | | |

## பாடம் 6

ஒரு தந்தியை அனுப்பும்பொழுது முதலில் விலாசப் பகுதியை அனுப்புகிறோம். விஷயப் பகுதிக்குப் பின்னர் வருகிறோம். விலாசப் பகுதிக்கும் விஷயப் பகுதிக்கும் இடையில், பிரிக்கும் ஒலிக்குறி ஒன்று (Bar of Separation) பயன்படுத்தப்படும். இந்த ஒலிக் குறியை அடித்த பின் தான், விஷயப் பகுதியை அடிக்கவேண்டும். விஷயப் பகுதி முடிவுற்றதும், அதைக் குறிக்கவும் பிரிவுக்குறி பயன்படுத்தப்படவேண்டும்,

பிரிக்கும் குறி — ● ● ● ● —

ஒரு தந்தியை அனுப்பி முடிந்ததும், முடிந்ததற்கறி குறியாக ஒரு ஒலிக்குறியை அடிக்கவேண்டும்.

முடிக்கும் ஒலிக் குறி ● ● ● — ●

ஒரு குறிப்பிட்ட சொல்லைத் திரும்பவும் அடிக்க வேண்டும் என்று விரும்பினால் அதற்கு ஒரு ஒலிக் குறி பயன்படுகிறது. ● ● — — ● ●

8½ போன்ற பின்னங்களைக் குறிக்க முதலில் 8 (எட்டு) என்ற இலக்கத்தைத் தந்தியிலடித்து, அதற்குப்பின் ஒரு பின்னம் தொடர்கிறது என்பதைக் காட்ட 'ப' என்ற எழுதின் ஒலிக்குறியை (● — — ●) அடிக்கவேண்டும் தந்தி வாங்குபவர் 'ப' என்ற எழுத்தை எழுதக்கூடாது. அதற்குப்பின்னால் அடிக்கபபடும் ½ என்பதைமட்டும் எழுதிக் கொள்ளவேண்டும். 'ப' என்ற எழுத்தை அடிக்காவிட்டால் 81/2 என்று பிழையாக எழுதநேரிடும்.

1/2 என்பதிலுள்ள / க்குள்ள ஒலிக்குறி ● — ● ● — 1/2 என்பதை ½ போலவும் எழுதலாம். ½ என்பதிலுள்ள — குறிக்க — ● ● — ● என்ற ஒலிக் குறியைப் பயன் படுத்தவும்.

Dash (26_*_1_*_55) இவ்வெடுத்துக் காட்டில் காட்டப்பட்டுள்ள கோட்டை — ● ● ● ● — என்ற ஒலிக் குறியால் குறிக்கவும்.

அரைப்புள்ளி, கேள்விக்குறி, வியப்புக்குறி போன்றவைகளைக் குறிக்கத் தனியே ஒலிக்குறிகள் வேண்டியதில்லை.

இப்பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஒலிக்குறிகள் எல்லாம், ஆங்கில முறையிலுள்ளவையே,

## வாழ்த்துத் தந்திகள்

வாழ்த்துத் தந்திகள் கொடுப்பவர்கள், ஒன்றிலிருந்து இருபத்தொன்று வரையிலுள்ள எண்களில் ஏதாவதொன்றை எழுத்தால் செய்தி எழுதும் பகுதியில் எழுதினால் போதும். ஒவ்வொரு எண்ணுக்கும் குறிப்பிட்ட பொருளுண்டு. எண்களுக்கு ஆங்கில முறையில் கொடுக்கப்பட்டுள்ள பொருளைத் தழுவியே, தமிழ்த்தந்தி முறையிலும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒன்று. என் உளப்பூர்வமான தீபாவளி வாழ்த்துக்கள். (தமிழ் நாட்டில் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவதால் இதையே பொங்கல் வாழ்த்தாகவுங் கொள்ளலாம். காலம் நோக்கிப் பொருளுணர்வது எளிது. அல்லது அதற்கென ஒரு எண்ணைப் படைக்கலாம். இதைச் செய்யவேண்டியது அரசியலாரே யாகும்.)

இரண்டு ஈத்பெருநாள் வாழ்த்துக்கள் !

மூன்று உளப்பூர்வமான பிஜோயா வாழ்த்துக்கள் !

நான்கு புத்தாண்டில் தங்களுக்கு மகிழ்ச்சி பொங்குக !

ஐந்து பல்லாண்டு வாழ்வீராக !

ஆறு குழந்தைச்செல்வம் பெற்றமைக்கு மகிழ்ச்சி மிக்க வாழ்த்துக்கள் !

ஏழு உயரிய பெருமை தங்களுக்களிக்கப்பட்டதற்காக மனமார்ந்த பாராட்டுதல்கள்,

| | |
|---|---|
| எட்டு | நீண்ட ஆயுளும் நிறைந்த மகிழ்ச்சியும் உள்ள மணவாழ்க்கையைப் பெறுவீராக! |
| ஒன்பது | மகிழ்ச்சி நிறைந்த கிருஸ்துமஸ் ஆகுக! |
| பத்து | தேர்வில் அடைந்த வெற்றிக்குப் பாராட்டுதல்கள். |
| பதினொன்று | தங்கள் பிரயாணம் இனிது முடிவுறுக! |
| பன்னிரண்டு | தேர்தலில் வெற்றிபெற்றதற்கு உளப்பூர்வமான பாராட்டுதல்கள். |
| பதின்மூன்று | தங்கள் வாழ்த்துக்களுக்கு நன்றி, என் / எங்கள் வாழ்த்துக்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள். |
| பதினான்கு | பாராட்டுதல்கள்! |
| பதினைந்து | அன்பு செறிந்த வாழ்த்துக்கள். |
| பதினாறு | இறைவனின் அருள் மழை மணமக்கள் மேல் பொழியுமாக! |
| பதினேழு | உங்களிருவருக்கும் இன்பமும், வளமும் கொழிக்கும் மணவாழ்க்கை கிட்டுமாக! |
| பதினெட்டு | விடுதலை நாளன்று நல்நினைவுகளும் வாழ்த்துகளும்! |
| பத்தொன்பது | மனப்பூர்வமான குடியரசு வாழ்த்துக்கள் குடியரசு நீடுவாழி! |
| இருபது | உள்ளத்தெழுந்த ஹோலி வாழ்த்துக்கள்! |
| இருபத்தொன்று | நிகழ்ச்சி (அல்லது விழா) வெற்றியுடன் முடிவுறுக! |

## இரகசியத் தந்திகள்

இத்தந்தியில் எழுதப்படும் ஒவ்வொரு சொல்லும் ஐந்து எழுத்துக்களைக் கொண்டதாயிருக்கவேண்டும் அச் சொல்லில் வடமொழி எழுத்துக்கள் இடம்பெறக் கூடாது இரகசியப் பொருளைத் தரும் ஒவ்வொரு சொல்லிலும் அ முதல் ஔ ஈராக உள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் ஃ என்ற ஆய்த எழுத்தும் இடம்பெறக் கூடாது. க், ச் போன்ற மெய் யெழுத்துக்களும், க, ங, ச போன்ற உயிர் மெய்யெழுத்துக்களும்தான் அதில் இருக்க வேண்டும்.

உயிர் எழுத்துக்களையும் ஆய்த எழுத்தையும் விரைவில் எழுதுவது இயலாதாகையால், அவைகள் இரகசியத்தந்தி யில் விலக்கப்பட்டுள்ளன.

இத்தந்தியில் உள்ள சொல், குறிப்பிட்டபொருளைத் தரலாம். ஆனால், அச்சொல் அதற்கியல்பாக உள்ள பொருளைத் தராமல் பிறிதொரு பொருளைக்கொண்டதா யிருக்கும்.

இத்தந்தியில் எண்களையும் பயன்படுத்தலாம் ஐந்து எண்களுக்கு மேற்படாது ஒவ்வொரு தொகுதியும் (Group) அமையவேண்டும்.

உச்சரிக்க முடியாதபடி அமைந்துள்ள ஐந்து எழுத்துக்களைக்கொண்ட சொல்லும் இத்தந்தியில் இடம் பெறலாம்.

(கங்ண்பற)

எழுத்துக்கள் அமைந்ததொகுதியும், எண்கள் அமைந்த தொகுதியும் சேர்ந்த கலவைத் தொகுதிகள் இத்தந்தியில் எழுதப்படலாம்.

இரகசியத் தந்திகளைப்போலவே, வேறு பலவகையான தந்திகளையும் அனுப்பலாம். சில அரசாங்கத்தில் உள்ள மிக உயர்ந்த ஊழியரால்தான் அனுப்பப் படலாம். பொதுமக்களின் நலத்துக்காக, நாட்டின் பாது காப்புக்காகவென்று சில தந்திச் செய்திகள் குறிப்பிட்ட

சில அரசாங்க ஊழியர்களால் அனுப்பப்படுகின்றன. இத் தந்திச் செய்திகளையும் தமிழில் அனுப்ப இயலும். ஆனால், இதுபற்றி அரசாங்கமே முடிவுகாண வேண்டும்.

## பாடம் 7

தந்திப்பகுதியில் வேலைசெய்வோர், கீழ்க்கண்டவற்றைக் கவனிக்கவேண்டுகிறேன். ஆங்கில முறையில் கையாளப்பட்டுவரும் சுருங்கிய எழுத்துக்களுக்குப் பதில் தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| BPD | Boat Paid | பக |
| BPDN | Boat Paid Night | பகஇ |
| RP | Reply Paid-Rupees or nP. | பதக |
| TC | Repetition | மமு |
| PC | Telegrams with telegraphic Notitfication of Delivery ordinary | தஅ |
| Express | Delivery by Special Messenger | விரைவு |
| XP | Porterage charges paid | கூக |
| RS | Rupees | ரூ |
| O | Oridinary telegram | ெம |
| X | Express telegram | வி |
| GM | Greeting message | மத |
| W | Words | சொ |
| O/o | Office of origin or office from | அஅ |
| Station to | Office of destination | அசெ |
| To | Addressee's name and address | சேஇ |
| From | Name (and address ifany of the sender | கஇ |

| | | |
|---|---|---|
| TMO | Telegraph money order | தப. |
| Text | Text of the message | பொ |
| LN | Local Number | வஎ |

தந்தி அனுப்பப்படும் நேரத்தைக் குறிக்க 8/20, 17·20 என எண்களையே பயன்படுத்தவும் காலத்தைக் காட்ட ஆங்கில முறையில் எழுத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. தமிழத் தந்தி முறைக்கு எண்களைக்கொள்வதே எளிதாகும். மேலும் தந்தி கொடுக்கப்பட்ட நேரத்தைப் பொது மக்களும் எளிதில் புரிந்துகொள்வர். ஆகையால் தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தவில்லை.

| | | |
|---|---|---|
| Post | Post | அஞ் |
| PR | Post registered | அப |
| PAV | Air Post | அஆ |
| Open | To be delivered open | திகொ |
| MP | To be delivered into the hands of the addressee himself | விகை |
| MTF | More to follow | இவ |
| CTF | Correction to follow | திவ |
| GP | To be kept at Post office till called for | அவை |
| TR | To be kept at Telegraphy office till called for | தவை |
| State | State Telegrams | அர |
| CAT | Communicate all addressees | எதஅ |
| Q | Ordinary Press message | செ |
| Bgq | Bearing ordinary Press message | பதசெ |
| LF | Late fee | அஉ |
| LF Trans | Late fee for transit office | அஉந |

| | | |
|---|---|---|
| LF Dest | Late fee for destination | அஉக |
| LF transdest | Late fee for transit&destination | அஉநக |

ஒடுங்கிய முறையில் அமைந்துள்ள தமிழ் எழுத்துக்களை விரித்தெழுதின், இவ்வெளியீடு இன்னும் பெரிதாகும். ஆகையால் விரித்தெழுதப்படவில்லை.

இதுபோன்றே பல வகையான தந்திச் செய்திகளிலும் கையாளப்பட்டு வரும் விரிந்த பொருளடங்கிய ஒடுங்கிய ஆங்கில எழுத்துக்களுக்குச் சரியான தமிழ் எழுத்துக்களை உண்டாக்கலாம். தமிழ்த்தந்தி முறையின் அடிப்படையான கருத்துக்களை மட்டும் விளக்குவதற்காகவே இச்சிறு வெளியீடு எழுதப்பட்டுள்ளமையின், ஆங்கில முறையில் காணப்படுகின்ற எல்லாவற்றையும் விளக்கவில்லை. விரிவஞ்சி விடுத்துள்ளேன்.

## தந்தி முகவரி (Abbreviated Address)

பதசெழுத்துக்களுக்கு மேற்படாது அமைந்த ஒரு சொல்லைக் குறிப்பிட்ட எவரும் தன் முகவரியாகக் கொள்ளலாம். இச்சலுகையைப் பெற அரசாங்கம் குறிப்பிடும் தொகையைச் செலுத்தவேண்டும்.

## சொற்களை எண்ணுவதெப்படி?

ஆங்கில முறையில் குறிப்பிட்ட விதிமுறைகள் உள்ளன. தமிழ்த்தந்தி முறைக்கும், மொழி அமைப்புக்கேற்ப விதிமுறைகள் தேவை. அரசாங்கத்துக்குப் பொருள் தேடித்தரும் பகுதி இது. ஆகையால், இதுபற்றி நான் விதிமுறைகள் வகுக்கவிரும்பவில்லை. இது ஆள்வோராலேயே ஆராயப்படவேண்டியதாகும்.

இத்துடன் தமிழ்த்தந்திபற்றிய பாடங்கள் முற்றுப் பெறுகின்றன.


இதைப்படிக்கும் அன்பர்கள், தங்கள் கருத்துக்களை எனக்குத் தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

Co-operative Press, Pudukkottai.—J. No. 2563.—1000.—18—7—57,

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1876
நன்கொடை எண்: 1878

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

அ. சிவலிங்கம்
மேலச்சிவபுரி
திருச்சி மாவட்டம்



7—10—56ல் குளித்தலையில் நடைபெற்ற தமிழ் ஆட்சி மொழி மகாநாட்டில், தமிழ்த் தந்திமுறை செயற்படுத்திக் காண்பிக்கப்பட்டது

* * *

"சர்வ வல்லமை கொண்ட அரசாங்கம் செய்ய வேண்டிய வேலையைத் தாங்கள் தனி மனிதராக மேற்கொண்டதற்கு மகிழ்ச்சி. தங்கள் துணிவைப் பாராட்டுகிறேன்"

— திரு ம. பொ. சிவஞானம்

* * *

"தமிழில் தந்தி அனுப்பும் முறை ஒன்றைத் தபால் துறை அலுவலரான திரு அ. சிவலிங்கம் வெளியிட்டிருப்பது, தமிழ்த்தாய்க்கு இது நல்ல காலம் என்பதை உணர்த்துகிறது................இம்முறையை அமுல் நடத்திப் பார்க்க அரசாங்கம் முன்வரவேண்டும் என நம்புகிறோம். இந்த முறையின் வெற்றியில் அரசாங்கத்திற்கு ஐயம் இருக்குமானால், ஒரு சிறு குழுவை அமைத்து இதைப் பற்றி ஆராய்வது நல்லது. ஏனெனில் இலட்சக்கணக்கான பொதுமக்களைப் பாதிக்கும் ஒரு முக்கியமான சிக்கல் இது."

—தமிழ்நாடு, மதுரை.